
திருவாசகம் - 06
நீத்தல் விண்ணப்பம் கதைவழியில்
கே. வீ. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

நீத்தல் விண்ணப்பத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் காளமேகப் புலவரைப் போலச் சிவனை இகழ்வதாகப் பாடிப் புகழ்கிறார். இதுவும் ஒரு வகையான இலக்கிய வகையாகும். சிவபெருமானைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் பாடுமிடங்கள் இலக்கியச்சுவை மிக்கனவாக அமைகின்றன. திருவாசகத்திற்கு முன்பே கதைகள் எழுதியிருக்க வேண்டும். இதுவரை நான் எழுதிய நூல்களில் எனக்கு மிகவும் பிடித்த நூல் திருவாசகமாகும். வாசகர்களுக்கும் இது நன்றாகப் பிடித்துள்ளது. முன்பைவிட அதிகமான வாசகர்கள் இதை வாசிக்கின்றனர். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ***எல்லாம் சிவமயம் என்பதுபோல எல்லாம் சிவனது செயல். மீண்டும் சந்திப்போம்.***

நன்றி.

கே. வி. குணசேகரம்

உ

சிவமயம்

# நீத்தல் விண்ணப்பம் கதைவடிவில்

## திருஉத்தரகோசமங்கையில் அருளியது

நிலைபேறில்லாத லௌகீக வாழ்வில் பற்று வைத்திருக்கும் ஆன்மாவுக்குச் சிவஞானம் ஒருபோதும் கிட்டாது. உலகப்பற்றை நீக்க வேண்டும். அது இலேசான காரியமல்ல. பற்றுக்களை அறுப்பவன் சிவன். சிவனைத் தவிரப் பற்றுக்களை வேறு எவராலும் அகற்ற முடியாது. அதனால் சிவனைப் பற்றிப்பிடித்தல் வேண்டும். அவனைப் பற்றிப் பிடிப்போருக்கு பற்று இருத்தல் ஆகாது. அதற்கு உறுதியான மனம் வேண்டும். மனம் ஒருவேளை உறுதிப்படும். மறுவேளை மாறிவிடும். காணக்கூடாது என்று நினைப்பதைப் பின் காண விரும்பும். மாணிக்கவாசகர் தனது மனதை உலகவாழ்வில் ஈடுபடாது தடுக்குமாறு இரந்து வேண்டுகிறார். அப்போ மனிதரின் நிலை என்ன?

**1) கடையவ னேனக் கருணையி னாற் கலந் தாண்டுகொண்ட**
**விடையவ னேவிட் டிடுதிகண்டாய்விறல் வேங்கையின் தோல்**
**உடையவ னே மன்னும் உத்தரகோசமங்கைக்கரசே சடையவ**
**னேதளர்ந் தேன்எம் பிரான்என்னைத் தாங்கிக்கொள்ளே.**

“இடப வானகத்தில் ஏறி உலகை வலம் வருபவனே. புலித்தோலை அணிந்தவனே. கீழானவனான என்னை உனது கருணையினால் அணைத்து ஆட்கொண்டாய். மீண்டும் நான் உலக வாழ்க்கையில் விழாதபடி என்னைக் காப்பாற்றுவாயாக” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைக் கேட்கிறார். அவ்வளவு கொடுமையானது உலகவாழ்க்கை. இருந்தும் அதை நாடித்தான் மனம் பேதலிக்கிறது. மகாலிங்கம் மனைவியோடு வாழும்போது கலையரசி என்ற பெண்ணோடு தொடர்பு வைத்திருந்தவர். பின் மனைவி இறந்ததும் அவளுடன் கூடியிருந்தவர். அதனால் ஏகப்பட்ட தொல்லைகள் தினமும் வரும். அதனால் பெரும் அவமானங்கள் உண்டாகும். துன்பங்களைத் தாங்கமுடியாது அவற்றைக் கதிரேசனிடம் கூறக் கதிரேசன் அவரைச் சிவவழிபாட்டில் ஈடுபடச் செய்தவர். அவர் மனம்மாறித் தென்னாடு சென்று அங்குள்ள சிவன்கோவில்களைத் தரிசித்து வந்தபின்பு மிகவும் மகிழ்வுடனும், நிம்மதியாகவும் வாழ்ந்தவர். அவர் தனது

சொத்தில் ஒரு பகுதியைக் கலையரசிக்குக் கொடுத்துவிட்டுத் தன்னுடன் இனித் தொடர்பு வைக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு வந்தார். சமீபத்தில் கலையரசி மகாலிங்கத்திடம் வந்து பல்வேறுவிதமான தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறாள். அதனால் மனம் வருந்திய மகாலிங்கம் கதிரேசனிடம் வந்து முறையிட்டார்.

‘‘மகாலிங்கம் இறக்கும் தறுவாயிலும், ஆசைகள் மேம்படும், வாழவேண்டும் என்ற நினைப்பு உண்டாகும். அதனால்தான் உயிர்போகாது தங்கியிருக்கும். உடல் இயக்கங்கள் அற்றபோதும் உயிர் போகாது. அதனால் நம் முன்னோர் மனிதன் ஆசைப்படும் பொருட்களைப் பாலில் கலந்து வாயில் ஊற்றுவர். அப்படியான நிலைப்பாடுள்ள மனிதர் தாம் வாழும்போது ஆசைப்பட்டவற்றை வெறுத்தொதுக்க முடியாது அல்லற்படுவர். அந்தநிலைதான் கலையரசிக்கு உண்டாகியுள்ளது. அதை விலக்குவது சிரமமானது. அதனால் நீ அவளுக்குத் தெரியாத ஓர் இடத்திற்குச் சென்று வாழ். மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை உலக வாழ்வில் ஈடுபடவிடாதே என்று இரக்கிறார். சிவனால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகரே இவ்வாறு இருக்கிறார் என்றால் ஆசையின் தன்மை எத்தகையது என்பதைச் சொல்ல முடியுமா..? பற்றுக்களை அறுப்பவன் அவன். அவனை இறுகப் பிடி’’ என்றார் கதிரேசன்.

**2) கொள்ளார் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்**

**விள்ளேன் எனினும் விடுதிகண்டாய் விழுத் தொழும்பின் உள்ளேன்**

**புறமல்லேன் உத்தர கோசமங் கக்கரசே கள்ளேன் ஒழியவும்**

**கண்டு கொண்டாண் டதெக் காரணமே.**

‘‘மகாலிங்கம், மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; ‘‘சிவனே என்னைவிட்டு இன்னும் காமநோய் நீங்கவில்லை. உனக்கு உரியவனான என்னை நானே காமனிடத்தில் ஒப்படைத்தால் நான் கள்ளன். அதை நீ அறிந்திருந்தும், சிவனே, நீ என்னை ஆட்கொண்டாய். அதற்குக் காரணம் என்ன…? நானும் ஒருவாறு உனது சீரிய தொண்டில் ஈடுபட்டிருக்கிறேன். உனது அடியவர்களுக்கு நான் வேற்றுமையானவன் அல்ல. அதனால் என்னை உலக இன்ப வாழ்க்கையில் ஈடுபடுத்த விடாதே’’ என்கிறார். சிவனால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகரே தனக்குக் காமநோய் உண்டென்று கூறுகிறார். அப்போது சாதாரண மனிதர்களின் நிலையாது? உலகில் உள்ள போகப் பொருட்களை

வெறுத்தொதுக்குவது மிகவும் கடினமானது. வெறுத்து ஒதுக்கிவிட்டு சிவனை நினைத்து சிவவேடமிட்டாலும் அப்பொருட்களைக் கண்டதும் அந்நினைவு உண்டாகும். அதனால் தான் பலர் தாம் குடிக்க மாட்டோம் என்று சிவன் கோவிலில் சத்தியம் செய்துவிட்டு இரகசியமாகக் குடிக்கிறார்கள். கலையரசி மீது உனக்குப் பற்றுள்ளது. அதனால்தான் அவளைக் கண்டபின் அவள் தந்த இன்பத்தை நினைக்கிறாய். அதனால் புலன்கள் அவ்வின்பத்தை நாடுகின்றன. இது இயல்பு. அதை வராமல் தடை செய்வதானால் சிவனை மெய்யன்புடன் வணங்க வேண்டும். மெய்யன்பு என்பது எதைப்பற்றியும் சிந்திக்காத நிலை. அந்நிலை இலகுவாக வராது. மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும். அதனால் எங்காவதொரு கோவிலில் சென்று இரு. அங்கிருந்தாலும் அது வரத்தான் செய்யும். உறுதியான மனமுடையவர்கள் எங்கிருந்தாலும் அமைதியாக இருப்பர். சலனமனமுடையோர் சிவன் வந்தருளும்போது எவற்றையோ நினைப்பர். மனதைக் கட்டுப்படுத்தினால்தான் சிவப் பேரின்பம் கிடைக்கும். அதனால் மனதைக் கட்டுப்படுத்து. கலையரசி வந்து உன்னருகே நின்று காமம் ததும்பச் சிரித்தாலும் உனது மனம் வைராக்கியமடைந்தால் சலனமடையாது. இதைத்தவிர வேறு வழியில்லை'' என்றார் கதிரேசன்.

**3) காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்**
**வேருறு வேனை விடுதிகண்டாய் விளங்குந்திருவார்**
**ஊருறை வாய்மன்னும் உத்தரகோசமங்கங்கைக்கரசே**
**வாருறு பூண்முலை யாள்பங்க என்னை வளர்ப்பவனே.**

மிகவும் சோர்வுடன் கதிரேசனது மாட்டுத் தொழுவத்திற்கு வந்தார் மகாலிங்கம். அப்போது வல்லிபுரம் மாட்டுத் தொழுவத்தில் இருந்த சிவலிங்கத்திற்கு அறுகம்புல்லும் பூக்களும் கலந்து மாலை கட்டிப்போட்டுவிட்டுச் சிவபுராணத்தைப் பண்ணுடன் பாடிக் கொண்டிருந்தான். மகாலிங்கம் முகம், கை, கால்களைக் கழுவிவிட்டு நீறணிந்து சிவலிங்கத்திற்கு அருகே வந்தார். அவரது மனம் தளம்பியது. மனதுள்க் கலையரசி தோன்றிச் சிரித்தாள். அவளது வெண்மையான பற்கள் பளிச்சிட்டன. ஈரமான உதடுகள் மோகத்தைக் கொடுத்தன. அவள் சமைத்த உணவு நாவில் தித்தித்தது. மகாலிங்கத்தின் மன உறுதி தளாந்தது. சிவன் வீற்றிருந்த இடத்தில் கலையரசி வீற்றிருந்து காமம் ததும்பச் சிரித்தாள்; "சிவனே, ஆற்றங்கரையில் நிற்கும் பெரும் மரங்கூட வெள்ளத்தால் அரிப்புண்டாகிப் பாறி விழுவது திண்ணம். அதுபோல எனது

புலன்கள் காமநோயால் அரிப்புண்டு என்னை அழிக்கின்றன. என்னை நல்வழிப்படுத்துவதற்காக மாது ஒரு பாகம் ஆகி இருப்பவனே. என்னைக் காப்பாற்று” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை மன்றாடுகிறார். அப்படியிருக்க சாதாரணமான பற்றுக்கள் மிக்க மனிதனான நான் கலையரசி வந்தமையால் அவளைக்கண்டு மயங்கி விட்டேன். அவளது அழகு என்னை முன்பு பித்தனாக்கியது. பின்பு உனது அருளால் அவளது பிடியிலிருந்து விடுபட்டேன். உன்னை நினைக்க, உன்னைக்காண சொற்களால் காணமுடியாத ஒரு பேரின்பம் மனதை ஆட்கொண்டது. இப்போ அவளைக் கண்டதும் அந்நிலை மாறிவிடுமோ எனப் பயமாக இருக்கிறது. அசுரர்களை அழித்துத் தேவர்களையும் மக்களையும் காப்பாற்றிய சிவனே, என் மனதுள் அசுரத்தனமான பற்றுக்களை நுழையவிடாதே. சிறிதாக அது நுழைந்தாலும், காலப்போக்கில் என்னை முழுமையாக விழுங்விடும். அதனால் சிறிதாக இருக்கையில் அதை அறுத்து விடு. இனி உன்னை மறந்து சீவிக்க என்னால் முடியாது. உன்நினைவு இல்லாவிட்டால் மனதுள் பல்வேறு விதமான பற்றுக்கள் நுழைந்து என்னைப் பாளாக்கி விடும். அதனால் சிவனே “என்னைக் காப்பாற்று” என்று அழுதார் மகாலிங்கம்.

4) **வளர்க்கின்ற நின்கருணைக் கையில் வாங்கவும் நீங்கியிப்பால்**

**மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய் வெண்மதிக் கொழுந்தொன்று**

**ஒளிர்கின்ற நீள்முடி உத்தரகோச மங்கைக்கரசே தெளிகின்ற**

**பொன்னுமின்னும் அன்ன தோற்றச் செழுஞ்சுடரே.**

மகாலிங்கத்தின் மனம் துன்பப்பட்டது. தமிழ்நாட்டிற்குச் சென்றபோது அவள் ஒதுங்கியிருந்தாள். தற்போது என்ன நினைத்தாளோ தெரியவில்லை. வீட்டுக்கு வந்துவிட்டாள். அதனால் வீட்டைவிட்டுவிட்டு மடத்திற்கு வந்தால் அங்கும் வருகிறாள். அதைக் கேள்விப்பட்ட நல்லைநாதன், “நீ திருந்தியதாகக் கூறியதெல்லாம் பொய். எதற்காக இப்படி நாடகமாடுகிறாய். உன்னால் திருந்த முடியாது என்று எனக்குத் தெரியும். அப்படியிருக்க ஏன் சிவத்தலங்களிற்குச் சென்றாய். அவள் உன்னைத்தேடி மடத்திற்கு வாறாள். அதனால் மடத்தின் புனிதத்தன்மை கெட்டுவிடும். அவள் இனி வந்தால் நீ மடத்திற்கு வராதே. இந்த வயதில் இது உனக்குத் தேவையா…? ஆராயாமல் பல தீமைகளைச் செய்தால் இவ்வாறு துன்பப்பட நேரிடும்” என்றார்.

“அண்ணை, நான் திருந்திவிட்டேன். அது கதிரேசண்ணைக்குத் தெரியும்” என்றபோது நல்லைநாதன் சொன்னார்; “மகாலிங்கம், மாணிக்கவாசக சுவாமிகள் எம் இறைவனின் அருளை முழுமையாகப் பெற்றவர். சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர். அவரே, “சந்திரசேகரா பொன்னையும், மின்னலையும் ஒத்த தேகத்தை உடையவனே, எப்போதும் கருணையில் வளர்ந்து வளர்ந்து கொண்டேயிருக்கும் உனது திருக்கரத்தால் என்னை வளைத்துப் பிடித்தும் நான் உன்னிடம் அகப்படாமல் இப்பொய் உலகவாழ்வில் இச்சை கொண்டவன்போலத் தெரிகிறது. அப்படி இருந்தாலும் என்னைக் கைவிட்டுவிடாதே” என்று அழுகிறார். முற்றும் துறந்து முழுமையாகச் சிவனால் ஆட்கொள்ளப்பட்ட அவரே உலக இன்பங்களில் தன்னை அகப்படவிடாதே எனும்போது கடந்த பல வருடங்களாக உலக இன்பங்களில் மூழ்கிக்கிடந்த நீ எவ்வாறு திருந்துவாய்” என்று கேட்டார். அதை நினைக்க மகாலிங்கத்திற்கு வேதனையாக இருந்தது. தவறு செய்த ஒருவன் திருந்தினாலும் அதை மக்கள் ஏற்கமாட்டார்கள். அதனால் சிவனே எனக்கு உலக இன்பங்கள் எவையும் வேண்டாம். உனது நினைவுடனேயே எனது இறுதிக்காலத்தைக் கழிக்க வழிசெய். என்னைக் கைவிட்டுவிடாதே. கலையரசி வீட்டுக்கு வந்ததும் என்னை விட்டுச் சென்ற எனது தீயநண்பர்கள் சிலர் மதுவுடனும், மாமிசத்துடனும் வீட்டுக்கு வந்துவிட்டார்கள் சிவனே, இவர்களிடம் இருந்து என்னைக் காப்பாற்று” என்று அழுதார் மகாலிங்கம்.

5) **செழிகின்ற தீப்புகு விட்டிலின் சில் மொழியாரில் பல்நாள்**
**விழுகின்ற என்னை விடுதி கண்டாய் வெறிவாய் அறுகால்**
**உழுகின்ற பூமுடி உத்தரகோசமங்கைக்கு அரசே**
**வழிநின்று நின் அருள் ஆர் அமுது ஊட்ட மறுத்தனனே.**

மகாலிங்கம் கதிரேசனின் மாட்டுத் தொழுவத்தில் இருந்த சிவலிங்கத்திற்கு செழுங்கழு நீர்ப்பூக்களால் கட்டிய மாலையை அணிவதற்காக வந்தபோது வல்லிபுரம் சொன்னான்; உன்னில் எனக்கு நம்பிக்கை இல்லை. சிவனைத்தொழ ஆரம்பித்தபின்பு தீய செயல்களை விட்டுவிட்டேன். கலையரசியால் எனக்குப் பல துன்பங்கள் வந்தன. அவள் மது அருந்துவாள். மது அருந்தினால் உண்ண மாமிசம் வேண்டும். அவளின் வற்புறுத்தலால்தான் நான் பெரும் குடிகாரனானேன். குடும்பப் பெண் என்றால் தனது கணவனில் அவள் மிகுந்த அக்கறையாக இருப்பாள். இவள் எவ்வளவு பொருளைச் சேர்க்க முடியுமோ அவ்வளவையும் சேர்த்தபின்பு விலகிவிடுவாள். இது தெரியாமல்

அவளை நம்பி மோசம் போய்விட்டேன். இப்போ கதிரேசண்ணையின் உபதேசத்தால் திருந்திவிட்டேன். அதைவிடத் தமிழ்நாட்டிற்குச் சென்று சிவத்தலங்களை வணங்கியபின்பு கலையரசியை நினைக்க அருவருப்பாக இருக்கிறது. மதுவையும் மாமிசத்தையும் எண்ண அருவருப்பாக இருக்கிறது" என்றாய். இப்போ கலையரசி வந்துவிட்டாள். நேற்று சின்னத்தம்பியும் சுந்தரமும் மதுவும் மாமிசமும் கொண்டு வந்தவர்களாம். அண்ணை இனி இஞ்சை வராதை. பெரும் துன்பப்பட்ட எமது குடும்பம் இப்போது தான் சிவனின் அருளைப் பெற்றுள்ளது. எனது மருமகன் பெரும் வர்த்தகன். அவன் இவ்வளவு காலமும் வீட்டுக்கு வருவதில்லை. மகள்தான் வந்து போவாள். இப்போ மருமகனும் அவரது குடும்பத்தினரும் வந்து போகின்றனர். இந்நிலையில் உன்னுடன் சேர்ந்தால் எனது குடும்பம் கெட்டுவிடும். சிவன் தந்த வாழ்வு அழிந்துவிடும்" என்றார் வல்லிபுரம்.

"வல்லிபுரம், நீ என்னைப்பற்றித் தவறாக நினைக்கிறாய். எனக்கு இப்போ சிவ நினைவைத்தவிர வேறு எந்த நினைவும் இல்லை. அவள் வந்தது ஏன் என்று எனக்குத் தெரியாது. அவள் வந்ததைக் கேள்விப்பட்ட சின்னத்தம்பியும் சுந்தரமும் மதுவும் மாமிசமும் கொண்டு வந்தனர். நான் ஏசிக் கலைத்துவிட்டேன்" என்று கூறும்போது வல்லிபுரம் சொன்னான்; "நான் நம்பமாட்டன். மாணிக்கவாசக சுவாமிகள் சிவனின் அடியவர். அவர் "வளர்ந்து சுடர்விட்டெரியும் தீச்சுடரை விரும்பிச்சென்று அதில் விழுந்து எரிந்து அழியும் விட்டில் பூச்சிபோன்று நான் காமக்கனலில் உழல்கிறேன். வண்டுகள் மொய்க்கும் மணம் கமழும் பூமாலையை அணிந்த சிவனே அத்தகைய என்னை நீ வழிமறித்து என்னை ஆட்கொண்டருள்வாயாக. அருள்நிறைந்த அமுதத்தை நீ எனக்கு வழங்கினாய். ஆனால் நான் அதை ஏற்க மறுத்தேன். அதனால் என்னைக் கைவிட்டுவிடாதே" என்று இரந்ததாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லக் கேட்டேன். அவரது நிலை அதுவானால் உனது நிலை எப்படி இருக்கும். அதனால் எனது நட்பை விட்டுவிடு"

**6) மறுத்தனன் யான் உன் அருள் அறியாமையின் என் மணியே**

**வெறுத்து எனை நீ விட்டிடுதி கண்டாய் வினையின் தொகுதி**

**ஒறுத்து எனை ஆண்டுகொள் உத்தர கோச மங்கைக்கு அரசே**

**பொறுப்பார் அன்றே பெரியோர் சிறுநாய்கள் தம் பொய்யினையே.**

“வேண்டுமானால் உனக்காக நான் சிவனை மன்றாடுகிறேன். தீயவனான இருந்தநான் சிவனின் அருளால் சிவனின் அடிமையான பின்பு எனது குடும்பத்தினரின் வாழ்வு மலையாக உயர்ந்து விட்டது. அதைக் கெடுக்க நான் விரும்பவில்லை. நீ பெரும் தனவந்தன். உனது பிள்ளைகள் வசதியானவர்கள். உனது செயல்களால் உனது குடும்பத்தினர் பாதிக்கப்பட்ட போதும் ஊரின் மதிப்புக்காக உனது இறுதி நாட்களிலாவது உன்னைப் பராமரிப்பர். எனது நிலை அதுவல்ல. எனது மகள் என்னைத் தனது தந்தையென்று ஒருபோதும் மதித்ததில்லை. நான் திருந்தியதையும் நம்பவில்லை. அதற்குக் காரணம் நீதான். நீ இப்போ குடிக்கத் தொடங்கிவிட்டதாகவும், கலையரசியோடு மீண்டும் உறவை ஆரம்பித்து விட்டதாகவும் எனது மகள் கூறுகிறாள். அதனால் இனிமேல் மகாலிங்கத்தோடு சேர்ந்தால் வீட்டுப்பக்கம் வரவேண்டாம் என்கிறாள். இந்தப் பிரச்சினையான தருணத்தில் கதிரேசன் அண்ணையின் உறவுதான் என்னைக் காப்பாற்றியுள்ளது. உன்னை நான் நம்பமாட்டேன். நீ என்னைக் குடிக்கும்படி வற்புறுத்துவாய். வற்புறுத்தலால் ஆசை உண்டாகும். ஆசை உண்டானால் மனம் மாறும். மனம் மாறினால் எனது வாழ்வு அழிந்துவிடும். மாணிக்கவாசக சுவாமிகள் தான் அறியாமையாலும், ஆசைகளாலும் உன்னை நினையாதிருந்தால் என்னை மன்னித்து ஆட்கொள்” என்கிறார். அவர் கேட்டதைத் தான் நானும் சிவனிடம் இரந்து கேட்கிறேன். அவர் சிவனைக் கேட்கிறார்; “போற்றுதற்குரிய மெய்ப்பொருளே எனது அறியாமையால் நான் உனது அருளைப் புறக்கணித்து விட்டேன். அதனால் நீ என்னை வெறுத்துக் கைவிட்டு விடுவாயோ…? தயவு செய்து கைவிட்டு விடாதே. பல்வேறு பிறப்புக்களில் நான் செய்த தர்மங்களையெல்லாம் அகற்றி என்னை ஆண்டருள்வாயாக. மாயங்கள் நிறைந்த பொய்யான உலகத்தை மெய்யென்று நம்புகின்ற அஞ்ஞானிகளின் போக்கை மன்னிப்பது பெரியோனான உனது செயல். அதனால் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்” என்கிறார். நான் எவ்வளவு பாவங்களைச் செய்திருப்பேன். அவற்றையெல்லாம் மன்னித்து எனது குடும்பத்தினருக்குப் பெருவாழ்வளித்த சிவனை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். உனக்கு நல்ல அறிவைக் கொடு என்று நான் இப்போது சிவனை வேண்டுகிறேன். அதனால் தயவுசெய்து இனிமேல் இங்கு வராதே” என்றான் வல்லிபுரம்.

“எனது நிலையை நீ புரிந்து கொள்ள மாட்டாய். ஆனால் சிவன் புரிந்து கொள்வான். அருளும் செய்வான்” என்றான் மகாலிங்கம். வல்லிபுரம் எதுவும் சொல்லவில்லை. பதில் சொன்னால் கதைக்க வேண்டிவரும். அது தவறு என்று நினைத்து மௌனியானான் வல்லிபுரம்.

**7) பொய்யவனேனைப் பொருள் என ஆண்டு ஒன்று பொத்திக்**

**கொண்ட மெய்யவனே விட்டிடுதி கண்டாய் விடம் உண்மிடற்று**

**மையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**செய்யவனே சிவனே சிறியேன் பவம் தீர்ப்பவனே.**

"சிறிது தூரம் சென்ற மகாலிங்கம் நின்று திரும்பிப் பார்த்தான். வல்லிபுரத்தைக் காணவில்லை. குடிக்கும் காலத்தில் சிறிது நேரங்கூட அவன் பிரிந்திருந்ததில்லை. அவனுக்கு குடிக்க மதுவும் உண்ண உணவும் கொடுத்தவன் மகாலிங்கம். அப்படிப்பட்டவன் தன்னைப் புரிந்து கொள்ளாது விலகிச் சென்றதை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது. உண்மையில் நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. என்னை விட்டுவிட்டுச் செல்வதாகக் கூறிய கலையரசி ஏன் திரும்பவும் வந்தாள் என்றும் புரியவில்லை. அவள் வந்ததைக் கண்ட பெருங் குடிகாரர்களான சின்னத்தம்பியும் சுந்தரமும் மதுப்போத்தல்களுடன் வந்துவிட்டனர். நான் குடிக்கத் தொடங்கினால் எனது பணத்தில் முன்போலக் குடிக்கலாமென்று திட்டமிட்டுத்தான் அவாகள் வந்திருப்பர். இதை எப்படி நிரூபிப்பது. அதை நினைக்க மகாலிங்கத்திற்கு வேதனையாக இருந்தது. தீய செயல்களை விட்டுவிட்டுச் சிவனை வணங்க ஆரம்பித்தபின் நல்லவர்களும், பெரியவர்களும் மகிழ்வுடன் என்னுடன் கலந்துரையாடினர். கலையரசியும், சின்னத்தம்பியும், சுந்தரமும் வந்தபின் நல்லவர்கள் என்னைத் திரும்பிப்கூடப் பார்ப்பதில்லை. சிவனை வணங்கும்போது மனதுக்குள் ஒரு பெருமகிழ்விருந்தது. நல்லவர்களின் துணை இருந்தது. இப்போது அவை யாவும் சென்றுவிட்டன. எனக்கு அந்த வாழ்வுதான் வேண்டும். தீயவற்றைச் செய்து செய்து மனம் வெதும்பியதைவிட இப்போது மோசமாக இருக்கிறது. சிவனே, நீ தான் இவற்றை நீக்குதல் வேண்டும். மாணிக்கவாசகர் சொல்கிறார்; "உயிர்களைக் காத்தற் பொருட்டு விசத்தை உண்ட நீலகண்டப் பெருமானே, "சிவந்த மேனியையுடைய சிவனே, எனது பிறவிப் பிணியை அழிப்பவனே, மாயமான உலக இன்பங்களில் மூழ்கியிருந்த என்னைச் சீர்திருத்தியவனே, என்னைக் கைவிட்டுவிடாதே, என்கின்றனர். அது உண்மையான வார்த்தைகள். அதனால் குடித்து வெறித்துத் தீயசெயல்களையெல்லாம் அஞ்சாது செய்துவந்த என்னைச் சீர்திருத்தி உனது அருமையைப் புரியவைத்துப் புனிதனாக்கிய நீ, இப்போது இவ்வாறு சோதிக்கலாமா…? உனது சோதனையை நிறுத்தி என்னை ஆட்கொண்டருள்" என வேண்ட அவனது கண்கள் கலங்கின.

“அப்போது அங்குவந்த வல்லிபுரம் சொன்னான்; “தயவு செய்து இவ்விடத்தைவிட்டுச் சென்றுவிடு. யாராவது நீ இங்கிருப்பதை எனது வீட்டாருக்குச் சொன்னால் எனக்குப் பெருந்துன்பம் ஏற்படும். எனது சிவநினைவைத் தயவுசெய்து குழப்பாதே” என்றான். அதைக்கேட்ட மகாலிங்கம், “சிவனே, எனக்கேன் இச்சோதனை” என்றான்.

**8) தீர்க்கின்றவாறு என் பிழையை நின்சீர் அருள் என்கொல்என்று**
**வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய் விரவார் வெருவ**
**ஆர்க்கின்ற தார்விடை உத்தரகோச மங்கைக்கு அரசே**
**ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம் வினையேனை இருதலையே.**

வல்லிபுரம் தொழுவத்திற்கு வந்து காளைகளையும், பசுக்களையும் குளிப்பாட்டி நீறுபூசி சந்தணமும் குங்குமமும் இட்டான். பின் தூபதீபம் காட்டினான். பின் சிவனுக்குச் செழுங்கழுநீர்ப்பூவால் மாலை கட்டி அதைச் சூட்டினான். “சிவனே, மாணிக்கவாசக சுவாமிகள், உள்ளம் அமைதிபெற்று, அச்சத்தை அகற்றி, பிரம்மச்சாரிய விரதம் காத்து, மனதை அடக்கி, சிந்தையை உன்பால் வைத்து, ரிஷபவாகனனான உனது காளையின் கழுத்தில் அணிந்திருக்கின்ற சலங்கைகளின் ஓசையானது பகைவர்களைப் பயமுறுத்தி விலகிச் செல்லச் செய்கிறது. ஐம்பொறிகள் என்னைத் தீயசெயல்களைச் செய்யும்படி சொல்கின்றன. பொறிவழியே செல்லாதே என்று மனம் எச்சரிக்கிறது. எல்லா வழிகளிலும் பிழைகளைச் செய்கின்ற என்னை நீ எவ்வாறு பொறுத்துக் கொள்வாய் என்று எனது மனம் அச்சமடைகிறது. அப்படியான நிலையில் இருக்கும் என்னை நீ கைவிட்டுவிடாதே” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதாக ஆச்சிரமத்துச் சுவாமியாரும், கதிரேசன் அண்ணாவும் சொல்வார்கள் அது உண்மை. எந்தவிதமான சிந்தனையுமின்றி உன்னை நினைக்க விடுகிறார்கள் இல்லை. முழுமையான சிவபக்தனாகிவிட்டேன் என்று பெருமையாகக் கூறிய மகாலிங்கம் இன்று மாறிவிட்டான். அதை நினைக்கப் பயமாக உள்ளது. அவன் வரும்போது உனது வாகனமான காளையில் கட்டிய சலங்கை ஒலி தீயவற்றை விரட்டும் என்று அறிந்தபின் தொழுவத்தில் உள்ள அனைத்துக் காளைகளினதும் கழுத்தில் மணிகட்டியுள்ளேன். அவை தலையை அசைக்கும்போது உண்டாகும் இனிமையான ஓசை எனது மனதிற்குத் தைரியத்தைக் கொடுக்கிறது. அதனால் நான் பயப்படவில்லை. மாணிக்கவாசக சுவாமிகளையே ஐம்பொறிகள் தம்போக்கில் இழுக்கின்றனவென்றால் தீயவனான

எனது நிலை என்ன…? இப்பொழுதுதான் மகிழ்ச்சியும், நிம்மதியும் எனக்கு உனது அருளால் கிடைத்துள்ளது. அப்படியான ஒரு மகிழ்வை உன்னை வணங்கியபின்தான் பெற்றேன். எனினும் சில சமயங்களில் எனது மனம் பழைய வாழ்வை அசைபோடுகிறது. அதைத்தடுத்து நிறுத்து. மகாலிங்கம் போன்றவர்கள் திரும்பத் திரும்ப வந்து பேசினால் சில சமயம் மனம்மாறி விடுமோ என்ற பயம் எனக்குண்டு. அதனால் மனம் வருந்துகிறேன். அவ்வாறு மனம் வருந்தும் என்னைக் கைவிட்டு விடாதே" என்று இரந்தான் வல்லிபுரம்.

**9) இருதலைக் கொள்ளியன் உள்எறும்பு ஒத்து நினைப்பிரிந்த**

**விரிதலையேனை விடுதி கண்டாய் வியன் மூவுலகுக்கு**

**ஒரு தலைவா மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**பொருதரு மூவிலைவேல் வலன் ஏந்திப் பொலிபவனே.**

கதிரேசன் மாட்டுத் தொழுவத்திற்கு வந்தபோது வல்லிபுரம் எதைப்பற்றியோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்ததால் அவர் வந்ததை அவன் கவனிக்கவில்லை. அவர் நேரே சென்று அழகனைப் பார்த்தார். அவரைக் கண்ட அழகன் கதறியது. அச்சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுச் சிந்தனையில் இருந்து விடுபட்ட வல்லிபுரம் கதிரேசன் அருகில் சென்று சொன்னான்; "தீய செயல்களைச் செய்துவந்த காலத்தில் நான் எந்தவிதமான யோசனைகளும் இன்றி வாழ்ந்தேன். களவெடுத்தேன். தீய செயல்கள் பலவற்றைச் செய்தேன். இருப்பினும் மனம் சஞ்சலப்படவில்லை. கவலைப்படவில்லை. இப்போ சிவனை வணங்கத் தொடங்கிய பின்பு நான் செய்வது சரியா, பிழையா என்று எண்ணிக் கவலைப்படுகிறேன். எனது குடும்பம் மிகுந்த மகிழ்வுடன் வாழ்கிறது. அந்த மகிழ்வை என்னால் அனுபவிக்க முடியவில்லை. மகாலிங்கம் அடிக்கடி இங்கு வருகிறான். அவன் முன்போல இருந்தால் கவலையும் பயமும் வராது. அவன் இப்போது கலையரசியுடன் சேர்ந்து விட்டான். தீயவர்களான சுந்தரமும் சின்னத்தம்பியும் அவனது கூட்டாளிகளும் சேர்ந்து விட்டனர். அதனால் பயமாக இருக்கிறது. சுவாமிகள் சொன்னதுபோல இருபக்கமும் தீப்பற்றி எரிகின்ற கொள்ளியினுள் அகப்பட்டுக்கொண்ட எறும்பின் நிலை எனக்கு வந்துள்ளது. ஒரு பக்கம் குடும்பம், மறுபக்கம் மகாலிங்கம். என்னைச் சிவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதான்.

"பிரச்சினைகள், சிக்கல்கள், துன்பங்கள் போன்ற பல முகங்களைக் கொண்டது வாழ்க்கை. வாழ்க்கையை ஒழுக்கமுள்ளதாக அமைத்துக்

கொண்டால் நீ சொன்னது போன்ற பிரச்சினைகள் யாவும் அடுத்தடுத்து வரும். மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகப் பிரசங்கத்தைச் சுவாமிகள் செய்யும்போது கேட்டிருக்கிறாய். அதைப் பின்பற்றியும் வருகிறாய். மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவனைத் தவிர்ந்த வேறு எந்த நினைவுகளும் இல்லை. அப்படி இருந்தும் அவர் உலக இன்பங்கள் தன்னை அச்சுறுத்துவதாகவும், அதிலிருந்து தன்னைக் காக்குமாறும் சிவனை இரக்கிறார். அவர் சொல்கிறார்; “அகன்ற மூவுலகிற்கும் தலைவனே, போரின்போது திரிசூலத்தை வெற்றியுடன் கையாளுபவனே, இருபக்கமும் தீப்பற்றி எரிகின்ற கொள்ளியினுள் அகப்பட்ட எறும்புபோல உலக இன்பங்கள் ஒரு பக்கம் நெருக்க மறுபக்கம் உன்னைப் பிரிந்துவிடுவேனோ என்ற நினைப்புடன் தலைவிரி கோலத்தில் அலைகிறேன். என்னோடு கூட இருந்து எனது தவிப்பை நீக்கு” என்கிறார். அவரே அப்படிக் கதறும்போது பற்றுக்கள் உள்ள உனது நிலை எப்படி இருக்கும். மகாலிங்கம் தான் கலையரசியுடனோ, தீய நண்பர்களுடனோ பழகவில்லை. எவ்வேளையிலும் சிவனின் நினைவுடன் அவனை வணங்கியபடி இருக்கிறேன். எனது போதாத காலம் அவர்கள் வலியவந்து பேசுகிறார்கள். வரவேண்டாம் என்றாலும் கேட்கிறார்களில்லை” என்கிறான். யாரையும் நம்பமுடியாது. மனிதர்கள் சந்தர்ப்பத்திற்கேற்றபடி நடப்பதில் வல்லவர்கள். அதனால் மகாலிங்கத்தின் விடயத்தில் மிகவும் அவதானமாக இரு” என்றார் கதிரேசன்.

“நான் மிகுந்த அவதானமாக இருக்கிறேன். உறுதியாகவும் இருக்கிறேன். அதைக் குடும்பத்தவரும், ஊரவரும் ஏற்றால்தான் மகிழ்ச்சியடைய முடியும்” என்று அழுதான் வல்லிபுரம்.

10) **பொலிகின்ற நின்தாள் புகுதப் பெற்று ஆக்கையைப் போக்கப்**

**பெற்று மெலிகின்ற என்னை விடுதி கண்டாய் அளிதேர் விளரி**

**ஒலிகின்ற பூம்பொழில் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**வலிநின்ற திண்சிலையால் எரித்தாய் புரம் மாறுபட்டே.**

“வல்லிபுரம் சிவதலங்களில் உத்தரகோச மங்கை என்னும் இடத்தில் உள்ள சிவத்தலம் மிக்க மகிமையானது. அங்குள்ள பூஞ்சோலைகளில் வண்டுகள் விளரி என்னும் இசையை இனிமையாகப் பாடுகின்றன.

வலிமைபொருந்திய மகாமேருமலையைத் திடமான வில்லாகக் கொண்டு பகைகொண்டு வந்த திரிபுரங்களையும் தகனம் செய்தவன் சிவன். அவன் உடல் உணர்வுகளைப் போக்கிச் சித்தத்துள் இருக்க வேண்டியவன். அச் சித்த சொரூபத்தில் நிலைத்திருக்க வேண்டிய நான் இன்னும் உடல் இன்ப வாழ்க்கையை நினைத்துச் சிறுமைப்பட்டுள்ளேன். அப்படி இருக்கும் என்னைக் கைவிட்டுவிடாதே" என்று சிவனை மாணிக்கவாசக சுவாமிகள் மன்றாடுகிறார். அவரே இந்நிலைக்காள்பட்டாரென்றால் சாதாரண மனிதரின் நிலை என்ன என்று யோசித்துப்பார்; வித்யமாலி, தாரகாசுரன், கமலாசுரன் என்ற மூன்று அரக்கர்கள் முறையே பொன்னாலும், வெள்ளியினாலும், இரும்பினாலும் மூன்று கோட்டைகளைக் கட்டித் தேவர்களைத் துன்புறுத்தினர். தேவர்கள் அசுரர்களின் கொடுமைகளைத் தாங்கமுடியாது சிவனிடம் முறையிட்டனர். சிவன் அவர்களை அழிக்கத் திருவுளம் கொண்டார். தேவர்கள் அதற்கான தேரைத் தயாரித்தனர். மற்றும் ஏற்பாடுகளையும் செய்தனர். பிரமதேவன் தேருக்குச் சாரதியானான். அத்துடன் தாம் அமைத்த தேரைப்பற்றித் தேவர்கள் கர்வம் கொண்டனர். அதை அறிந்த சிவன் மூன்று கோட்டைகளையும் பார்த்துப் புன்னகைத்தார். அவரது அச் சிரிப்பின் வலிமையால் மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாகின. அதனால் சிவனை வணங்கும் போதும், சிவச் செயல்களைச் செய்யும்போதும் சிவநினைவுடன் செய்தால் எந்தத் தீமையும் நம்மை வந்தடையாது. அதனால் வீண் எண்ணங்களை விட்டுவிட்டு மகிழ்வுடன் சிவநினைவோடு கருமமாற்று" என்றார் கதிரேசன்.

11) **மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப யான் உன்மணி**
**மலர்த்தாள் வேறுபட்டேனை விடுதி கண்டாய் வினையேன்**
**மனத்தே ஊறும் மட்டே மன்னும் உத்தரகோசமங்கைக்கு**
**அரசே நீறுபட்டே ஒளிகாட்டும் பொன்மேனி நெடுந்தகையே.**

"மகாலிங்கம், மாணிக்கவாசக சுவாமிகளின் சொல்மாலையைத் தினமும் படித்து அதன்படி வாழ்பவன் ரவீந்திரன். அவனது வாழ்க்கையில் சோதனைகள், துன்பங்கள் வந்தபோது மாணிக்கவாசக சுவாமிகள் சொன்ன வார்த்தைகளைத் தான் சொல்வான். ஒருமுறை அவன் விபத்துக்குள்ளானபோது சொன்னான்; "ஐயா, மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னார்;" கர்ம சொரூபியாகிய எனது மனதில் சுரக்கின்ற தேன் சிவன். அத்துடன் திருநீறு பூசப்பெற்றுப் பிரகாசிக்கின்ற பொன்போன்ற மேனியையுடைய கருணாகரனான சிவனே, மெய்யான

காட்சிகளைத் திரிவுபடுத்தி மனதின் விருப்புக்கேற்பச் செயற்படும் ஐம்புலன்களில் நான் கட்டுப்பட்டிருந்தமையால் உனது சுயமான சோதி வடிவத்தை எனது சுய அனுபவத்தால் பெற இயலாமையால் நான் உனக்கு வேறுபட்டவனாகிவிட்டேன். அதனால் நீ என்னைப் புறக்கணிப்பது பொருந்துமா"? என்று கேட்கிறார். எவ்வளவுதான் அவதானமாக வாழ்ந்தாலும் இந்திரியங்கள் எம்மை ஏமாற்றிவிடுகின்றன. எனது அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வை நான் தவறாகப் புரிந்து நடவடிக்கை எடுத்தமையால் பாதிக்கப்பட்டவன் மேலதிகாரியிடம் புகாரிட, அவர் அதை ஆராய்ந்து பார்த்துவிட்டு நான் செய்தது தவறு என்று கூறிவிட்டார். அதைப் பின் ஆராய்ந்து பார்த்தபோது நான் செயற்பட்ட முறை தவறு என உணர்ந்து சம்பந்தப்பட்டவனிடம் மன்னிப்புக் கேட்டேன். இது எப்படி நடந்ததென்று எனக்குப் புரியவில்லை. அதனால் ஏற்பட்ட மனக்குழப்பத்துடன் பிரயாணம் செய்தமையால் நான் விபத்துக்குள்ளானேன். ஐம்புலன்கள் எதற்கும் அடங்காது. அதனால் எதைச் செய்யும்போதும் சிவ நினைவுடன் செய்தல் வேண்டும்" என்றவன். ஒவ்வொருவரும் கர்மசொரூபியாவர். புலன்கள் மெய்ப்பொருளைத் திரிவுபடுத்திக் காட்டும். பொய்பேச வைக்கும். உண்மையை மறைக்கும். தாம் இச்சைப்படுவதை மெய்ப்பொருளாய் உணர்த்தி ஆராய்வின்றி அதைச் செய்விக்கும். அத்துடன் புலன்கள் எப்போதும் சிற்றின்பத்தையே விரும்பும். அதை மனம் கட்டுப்படுத்த வேண்டும். மனம் கட்டுமீறினால் பாதகமான செயல்களைத் தான் செய்விக்கும். ஒருவன் நினைப்பதை அவன்தான் அறிவான். மனதுக்கும் உதடுக்கும் சம்பந்தம் இருக்கு. அதனால் மனம் தான் விரும்பியதைச் சந்தர்ப்பத்திற்கேற்றமாதிரி மாற்றிப் பேசும். உனது செயலைப் பலர் நம்பவில்லை. பலர் உனக்கு நேராகச் சொல்ல விரும்பவில்லை. வல்லிபுரம் முன்போல இருந்தால் உனது வார்த்தைகளை நம்பியிருப்பான். இப்போ அவன் என்னால் யாரையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் அவற்றைப் புரிய வைக்க வேண்டாம். எனது மனம் உன்னை முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. அதனால் நான் மனம் வேறுபட்டவனாக இருக்கிறேன். அதற்காக என்னை ஆட்கொள்ளாது விடாதே" என்று அழுகிறான். உனது செயல் உனக்குத்தான் தெரியும். எது பொய், எது உண்மை என்பதை நீ அறிவாய்" என்றார் கதிரேசன்.

மகாலிங்கம், எதுவும் பேசவில்லை, "எதைச் சொன்னாலும் யாரும் நம்பமாட்டார்கள். காலம் பதில் சொல்லட்டும்" என்று எண்ணினான்.

12) **நெடுந்தகை நீ என்னை ஆட்கொள்ள யான் ஐம்புலன்கள் கொண்டு**
**விடும் தகையேனை விடுதி கண்டாய் விரவார் வெருவ அடும்தகை**
**வேல்வல்ல உத்தரகோச மங்கைக்கு அரசே கடும் தகையேன்**
**உண்ணும் தெள்நீர் அமுதப் பெருங்கடலே.**

அன்று பிரதோச விரதநாள். கதிரேசன் அன்று ஆச்சிரமத்திற்கு வந்த அடியார்களுக்கு மதிய உணவளித்தார். ரவீந்திரன் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களைக் கொடுத்தான். சுப்பிரமணியம் பெரும் வர்த்தகர். அவர் ஆச்சிரமத்திற்கு வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு பேசவிரும்பினார். அப்போது கதிரேசன் அவரோடு இருந்தார்.

“சுவாமி, நான் ஆச்சிரமத்திற்கு வரும் அடியார்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மதிய உணவு கொடுக்க விரும்பி எனது வர்த்தக நிலையத்தில் கணக்காளராகப் பணிபுரியும் ஆதவனை அனுப்பியபோது என்னைவந்து கதைக்குமாறு கூறினீர்களாம். நான் வெளியூரிற்குச் சென்றமையால் உடனே வரமுடியவில்லை. இப்போது வந்துள்ளேன் சொல்லுங்கள்” என்றான்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கதிரேசனைப் பார்த்தார். சுவாமிகள் ஒருவருக்கு நேரடியாகச் சொல்லமாட்டார். சொல்லவேண்டியவற்றை விபரமாகவும், பக்குவமாகவும் கதிரேசன் சொல்வார். அதனால்தான் சுவாமியார் கதிரேசனைப் பார்த்தார். விடயத்தைப் புரிந்துகொண்ட கதிரேசன் சொன்னார்; “சுப்பிரமணியம், அஞ்ஞானம் என்னும் பகைமையை மாய்ப்பதற்காகத்தான் சிவன் சூலாயுதத்தைக் கையில் வைத்திருக்கிறான். ஒருவர் தளர்வுற்றபோது அத்தளர்வு நீங்கச் சிவன் என்ற அமுதைத் தொழுதால் களைப்பு, தளர்வு, சோர்வு யாவும் நீங்கி உற்சாகம் உண்டாகும். சிவன் கருணைமிக்கவன். அவன் கருணாகரனாக இருந்து மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொண்டதாக மாணிக்கவாசக சுவாமிகளே கூறுகிறார். எனினும் அவர் தான் பொறிவழியே சென்றமையால் சிவனைப் பிரிந்திருப்பதாகக் கூறுகிறார். அப்படியிருந்தும் என்னை விட்டுவிடாதே என்று இரக்கிறார். சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்களே பொறிவழியே செல்கின்றனர். வியாபாரி மிகமிக ஒழுக்கமாக இருத்தல் வேண்டும். புலன்களைக் கட்டுப்படுத்தியவனாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் ஆசை மேலீட்டால் பெரும் பாவங்கள் செய்ய வேண்டியநிலை உருவாகும். உனது வர்த்தக நிலையத்தைப்பற்றி மக்கள் நல்லமுறையில் பேசுவதில்லை. தொழிலாளருக்குச்

சரிவரச் சம்பளம் கொடுப்பதில்லையென்றும், பொருட்களில் கலப்படம் செய்வதாகவும் மக்கள் கூறுகின்றனர். அது பெரும்பாவம். புண்ணியம் செய்யப்படும் பொருள் சுத்தமாக இருத்தல் வேண்டும். புண்ணியம் செய்பவன் புலன்களின் வழியே செய்யக்கூடாது. கருணாகரனான சிவபெருமானின் அடியவர்களுக்குப் பாவத்தைச் சேர்க்க நாம் விரும்பவில்லை. அதனால்தான் உனது கணக்காளரிடம் உன்னை வரும்படி சுவாமியார் சொன்னார்" என்றார் கதிரேசன்.

**13) கடலினுள் நாய் நக்கி அங்கு உன் கருணைக் கடலின் உள்ளம்**

**விடல் அரியேனை விடுதிகண்டாய் விடல் இல் அடியார்**

**உடல் இலமே மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**மடலின் மட்டே மணியே அமுதே என்மது வெள்ளமே.**

வல்லிபுரம் சிவலிங்கத்திற்கு மாலை அணிந்துவிட்டுக் கற்பூரத்தைக் கொழுத்தினான். மகாலிங்கம் வந்ததில் இருந்து அவனது மனம் சஞ்சலப்பட்டது. சிவனைத் தொழுத பின்பு குடும்பம் நல்ல நிலைக்கு வந்துவிட்டது. மகாலிங்கத்தை யாரும் நம்புவது கிடையாது. யாராவது தனது மருமகனிடம் மகாலிங்கம் தொழுவத்திற்கு வருவது பற்றித் தவறாகச் சொல்லிவிட்டால் அதை யாரும் நம்புவார்கள். மனதை அவனால் சமநிலைப்படுத்த முடியவில்லை. அப்போது ஆச்சிரமத்தில் முதல்நாள் சுவாமியார் பேசியது அவனது காதில் கேட்டது. "சிவனடியார்களே, சிவன் தன்னை விடாது பற்றிப் பிடிக்கும் அடியவர்களது உடலை ஆலயமாக்கிக் கொள்வான். அவன் பூவில் சுரக்கும் தேன் போன்றவன். ஒளிமயமானவன். அமிர்தம் போன்றவன் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். மாணிக்கவாசகரைச் சிவன் நேரில் வந்து ஆட்கொண்டவன். அப்படியிருந்தும் தான் உலக பந்தங்களில் ஈடுபட்டு விடுவேனோ என்று அஞ்சுகிறார். அது அவரது பாமாலையைப் படிப்பவர்களுக்குத்தான் புரியும். "கடல் போல வெள்ளம் வந்தாலும் நாய் நக்கித் தான் அதைக் குடிக்கும். அதுபோல நான் உனது அளவிட முடியாத கருணையை நான் உரியமுறையில் பயன்படுத்தவில்லை. உன்மீது என் மனதைச் செலுத்த என்னால் முடியவில்லை. அப்படியிருக்கின்ற என்னை ஒரு போதும் ஒதுக்கிவிடாதே" என்று இரக்கிறார். அதைக் கேட்க வல்லிபுரத்திற்குப் பயமாக இருந்தது. மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதுபோன்று நான் நாய். என்னால் இப்போது மனதை ஒருநிலைப்படுத்த முடியவில்லை. மனம் தடுமாறுகிறது.

அளவுக்கதிகமாகப் பயப்படுகிறேன். அதனால் எனக்கு வந்த இடரை நீக்கி எனது குடும்பத்தை நிம்மதியாக வாழவை. எனது மருமகனின் குடும்பம் சிவபூசை செய்வது. நான் சிவபக்தனாக மாறிய பின்புதான் அவர்கள் எனது வீட்டுக்கு வந்தனர். அதனால் நான் என்றும் உன்னைத் தொழவேண்டும். பற்றுக்களை அறுக்க வேண்டும்" என்று அழுதான் வல்லிபுரம்.

**14) வெள்ளத்துள் நாவற்றி ஆங்கு உன் அருள் பெற்றுத் துன்பத்து**

**இன்னும் விள்ளக்கிலேனை விடுதி கண்டாய் விரும்பும் அடியார்**

**உள்ளத்து உள்ளாய் மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**கள்ளத்து உளேற்கு அருளாய் களியாத களி எனக்கே.**

சிவலிங்கத்தின் அருகே நின்ற வல்லிபுரம் முறைப்படி ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டிருந்தான். தொழுவமெங்கும் சாம்பிராணியின் வாசம் பரவியிருந்து கமகமத்தது. காலையில் தொழுவத்திற்கு மகாலிங்கம் வந்ததை நல்லைநாதன் கண்டுவிட்டுக் கதிரேசனுக்குச் சொன்னபோது கதிரேசன் சொன்னார்; "ஆற்றுள் இருந்துகொண்டே நீரைப் பருகாமல் நாவுலர்ந்து வருந்துபவர்கள் இருக்கிறார்கள். அதுபோலச் சிவனின் அருள்வெள்ளத்தைப் பெற்றும் உலக பாசங்களில் இருந்து விலகிக்கொள்ள என்னால் முடியவில்லை. அதற்காக என்னை ஒதுக்கிவிடாதே என்று மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனை இரக்கிறார். அத்துடன் உன்னை வணங்கும் அடியார்களின் உள்ளத்தில் நீ எப்பொழுதும் வீற்றிருக்கிறாய். அப்படியிருந்தும் பொறிகளில் கட்டுண்டு இருக்கும் எனக்கு உனது பேரானந்தத்தைக் கொடுத்தருள்" என்கிறார். மாணிக்கவாசக சுவாமிகளுக்கே இந்த நிலையானால் குடித்து வெறித்துத் தீயசெயல்களையே செய்த வல்லிபுரத்தின் நிலை எப்படியிருக்கும்? அவன் சிவனை வணங்கி வணங்கித் தீயவற்றைச் செய்யவும் கூடும். ஏனென்றால் மகாலிங்கத்தின் தொடர்பை அவன் இன்னும் நீக்கவில்லை" என்றவர்.

தொழுவத்திற்கு வந்த கதிரேசனைக் கண்ட வல்லிபுரம் கண் கலங்கினான்; அண்ணை, சிவனை நினைத்த நான் இனி வேறு எதையும் நினைக்க மாட்டேன். ஆனால் மகாலிங்கம் வந்து ஏதாவது கதைத்தால் எனது மனம் குழம்பிவிடுகிறது. சிவனை நினைப்பவர்களின் உள்ளத்தில் சிவன் மகிழ்வுடன் இருப்பானென்று கேள்விப்பட்டிருக்கிறேன். மகாலிங்கம் இங்கு வருவதால் ஊரவரும், நீங்களும், எனது குடும்பத்தினரும் தவறாக

எண்ணிவிடுவீர்கள் என்று பயப்படுகிறேன். அதைச் சிவன் தான் நீக்கி எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும். காலையில் வந்த மகாலிங்கத்தை இங்கு வரவேண்டாம் என்று சொன்னேன். அவன் வருவான். இதற்கு நான் என்ன செய்வது” என்று கலங்கினான் வல்லிபுரம்.

**15) களிவந்த சிந்தையோடு உன் கழல் கண்டும் கலந்தருள**

**வெளிவந்திலேனை விடுதிகண்டாய் மெய்ச் சுடருக்கு எல்லாம்**

**ஒளிவந்த பூம்களல் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**அளிவந்த எந்தைபிரான் என்னை ஆளுடை என் அப்பனே.**

வல்லிபுரத்தை நம்புவரா விடுவதா என்று தெரியாது கலங்கினார் கதிரேசன். வல்லிபுரத்தினது தீயசெயல்களை ஊரே அறியும். அவன் எதற்கும் அஞ்சாத சிலருடன் சேர்ந்து தீயசெயல்களைச் செய்தமையால் அவனது சகோதரர்களே அவனுடனான தொடர்பை அறுத்துக் கொண்டனர். அதனால் தான் அவனது மகளது கணவனின் பெற்றோர் வல்லிபுரத்தை வெறுத்தனர். தற்போது அவன் சிவத்தலங்களுக்குச் சென்று வந்த பின்பு திருந்திவிட்டதாகச் சொல்லுகிறான். மகாலிங்கத்தை வரவேண்டாமென்றாலும் வருகிறான். நான் என்ன செய்வது என்று கேட்கிறான். அதனால் அவனை நம்பலாமா..? என்று யோசித்தார் கதிரேசன். மனம் நல்லவற்றை விரும்பினாலும் தீய உணர்வுகள் மனிதனைத் திருந்தவிடாது. திருவாசகம் உலக இயல்பை உள்ளதை உள்ளவாறு கூறும் நூல். மாணிக்கவாசக சுவாமிகள் சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர். அவரே மனித மனங்களைப்பற்றி நம்பிக்கையான தகவல்களை வெளிப்படுத்தவில்லை. அவர், “பிரகாசமான பொருட்கள் அனைத்திற்கும் மூலப்பிரகாசமான சிவனே, எப்போதும் எனக்குத் தந்தையாக இருந்து என்னைக் காத்தருள்பவனே, என்னை உன்மயமாக்குவதற்கு நீ எழுந்தருளியதை நான் மகிழ்வுடன் பார்த்தேன். ஆனால் உன்னோடு கலந்து கொள்ள வேண்டுமானால் உலகப்பற்றை நீக்க வேண்டும். அதை என்னால் நீக்க முடியவில்லை. அப்படிப்பட்ட என்னை விலக்கிவிடாதே” என்கிறார். அவருக்கே உலகப் பற்றை விட்டுவிட முடியவில்லை. அப்படியிருக்க வல்லிபுரம் போன்ற சிற்றறிவு படைத்தோர் மனம் மாற மாட்டார்கள் என்று எப்படி நினைப்பது. வல்லிபுரத்தின் மகளின் மாமன் அன்று காலை வந்து, “ஐயா, நீங்கள் ஊருக்குப் பெரியவர். நீங்கள் சொன்னதால்தான் எனது மகனுக்கு வல்லிபுரத்தின் மகளைத் திருமணம் செய்து வைத்தேன். ஆரம்பத்தில் சிவபக்தன் போல நடித்த வல்லிபுரம் இப்போ மகாலிங்கத்துடன் சேர்ந்து தீயசெயல்களைச்

செய்வதாக மக்கள் கூறுகின்றனர். எனக்கென்னவோ அவனது நடத்தை பிடிக்கவில்லை. அவன் பழையபடி மாறினால் அவனின் வீட்டுக்கு மருமகளை அனுப்ப மாட்டேன்.” என்றபின் கதிரேசனின் மனம் சஞ்சலப்பட்டது.

**16) என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றிநின்று எய்த்து அலைந்தேன்**

**மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய் உவமிக்கின் மெய்யே**

**உன்னை ஒப்பாய் மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய் என் அரும் பொருளே.**

கதிரேசன் தொழுவத்தில் இருந்த சிவலிங்கத்தின் முன் வந்து நின்றார். இவ்வளவு காலமும் ஏற்படாத ஒரு நிலை வல்லிபுரத்தால் இப்பொழுது அவருக்கு ஏற்பட்டிருந்தது. அவர் ஊர்ப்பெரியவர். பெரும் சிவனடியார். அதனால் ஊரவர்கள் தமது பிரச்சினைகளைக் கூறி அவரிடம் தான் தீர்வைக் கேட்பார்கள். வல்லிபுரம் தீயவன். சிவனை நிந்திப்பவன். அதனால்தான் பெரும் வர்த்தகரான தனபாலசிங்கம் தனது மகனை வல்லிபுரத்தின் மகளுக்குத் திருமணம் செய்யச் சம்மதிக்கவில்லை. அதனால் கதிரேசன் திருந்தித் தென்னாட்டிலுள்ள சிவன்கோவில்களைத் தரிசிக்கச் சென்று விட்டதாகக் கூறினார். அத்துடன் வல்லிபுரத்தின் மகள் சிவபக்தை என்றும் கூறினார். அதனால் சம்மதித்த தனபாலசிங்கம் இப்போது மகாலிங்கம் வல்லிபுரத்துடன் சேர்ந்ததால் வல்லிபுரம் தீயவனாக மாறிவிடுவான் எனப் பயப்படுகிறார். அதனால் கதிரேசனின் நிம்மதி போய்விட்டது. சிவலிங்கத்தின் அருகே வந்தார் கதிரேசன். செழுங்களுநீர்ப் பூக்களால் கட்டிய மாலை சிவலிங்கத்திற்குச் சாத்தப்பட்டிருந்தது. சில கணங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்த கதிரேசன். “மெய்ப்பொருளே, உனக்கு நிகர் நீயே. எனக்குத் தாய் போன்றவனே, தந்தை போன்றவனே, என் அரும் பொருளே. என்மீது இரக்கம் கொண்டு அன்புடன் பார்த்து, அப்பா நீ பயப்படாதே என்று சொல்லுவார் இல்லை. அதனால் நான் ஏங்கி நின்று இளைத்து அலைகிறேன். பரிதாபத்திற்குரிய என்னைக் கைவிட்டுவிடாதே” என்று மாணிக்கவாசக சுவாமிகள் இரக்கிறார். இன்று நானும் அந்த நிலையில்தான் உள்ளேன். தனபாலசிங்கம் முன்கோபக்காரன். தான் நினைத்ததை ஆராயாது செய்பவன். தற்செயலாக வல்லிபுரம் குடித்தால் அவனது மகளது எதிர்காலம் பாழாகிவிடும். அத்துடன் எனது மனமும் பாதிப்படையும். அதனால் சிவபூசையைப் பக்தியுடன் செய்யும் வல்லிபுரத்தைக் கெட்டழிய விடாதே” என எண்ணினார். அவரது கண்கள் கலங்கின.

**17) பொருளே தமியேன் புகல் இடமே நின் புகழ் இகழ்வார்**

**வெருளே என்னை விட்டிடுதி கண்டாய் மெய்ம்மையார்**

**விழுங்கும் அருளே அணி பொழில் உத்தரகோச மங்கைக்கு**

**அரசே இருளே வெளியே இகம் பரம் ஆகி இருந்தவனே.**

"ஐயா, நான் இங்கு வரும்போது மகாலிங்கத்தை வழியில் சந்தித்தேன். எனக்கு வந்த ஆத்திரத்திற்கு அவனைக் கண்டபடி பேசவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அவன் சொன்னவன்; "தெரியாத்தனமாக நான் கலையரசியை விரும்பிவிட்டேன். அவள் தனது பெற்றோருடன் சேர்ந்து என்னை வெருட்டுகிறாள். பத்து இலட்சம் ரூபா தரட்டாம். இல்லாவிட்டால் பலவழிகளிலும் பழிவாங்குகிறேன் என்கிறாள். நான் சிவனைத் தொழத் தொடங்கியபின்பு பற்றுக்ளை அனைத்தையும் விட்டுச் சிவனே தஞ்சமென்று வாழ்கின்றேன். நான் இனி வல்லிபுரத்தைச் சந்திக்க மாட்டேன். இது சிவன்மீது சத்தியம்" என்றவன். பார்க்கப் பாவமாக இருக்கிறது என்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டேன். கலையரசிக்கும் பல இலட்சம் ரூபா சொத்துக் கொடுத்தேன். அவள் அதை மறந்து என்னை வெருட்டுகிறாள். நான் மாணிக்கவாசக சுவாமியைப்போல என்னைச் சிவனிடம் ஒப்படைத்து விட்டேன். என்ன நடந்தாலும் பரவாயில்லை. செய்த பாவத்தை அனுபவிக்கத்தானே வேண்டும். ஆனால் வல்லிபுரம் பாவம். நான் அவனைச் சந்தித்தால் அவனுக்கும் பாதிப்பு உண்டாகும் என்பதால் இனிமேல் அவனைச் சந்திக்க மாட்டேன்" என்றவன் என்றாள் வல்லிபுரத்தின் மனைவி மரகதம்.

"மரகதம் இப்போது தான் எனது மனக்குறையைச் சிவனுக்குச் சொன்னேன். தற்செயலாகத் தனபாலசிங்கம் விபரீதமான முடிவை எடுத்தால் கடைசிவரையும் மாற்றமாட்டான். அதனால் பெருங்குழப்பமுண்டாகி இருக்கும். எப்பொழுதும் மாற்றமின்றி நிலைத்திருக்கும் மெய்ப்பொருளான சிவன், ஆதரவற்றவர்களுக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருப்பான். அவன் தன்னை நிந்திப்பவர்களுக்கும் அச்சமூட்டுபவன். மெய்ப்பொருளை உணர்ந்த ஞானிகள் அருந்தும் அருள்க்கனி அவன். அத்துடன் அஞ்ஞான இருளாகவும், ஞான வெளிச்சமாகவும் இருப்பவன். பிரபஞ்சமும் அவன். அதற்கு அந்தமான பொருளாகவும் இருப்பவன். அவன் பக்தர்களைனப் புறக்கணிக்க மாட்டான்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்" அது உண்மை, அதனால் சிவபக்தையான உனக்கும், உனது மகளுக்கு என்றும் உதவுவான்" என்றார் கதிரேசன்.

**18) இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னின்**

**அல்லால் விருந்தினனேனை விடுதி கண்டாய் மிக்க நஞ்சு அமுதாய்**

**அருந்தினனே மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே**

**மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே.**

மரகதமும் கதிரேசனும் மாட்டுத் தொழுவத்தில் கதைத்துக் கொண்டிருந்தபோது மகாலிங்கம் அங்கே வந்தான்; "அண்ணை, இந்தச் சிவன்மீது சத்தியம் செய்து சொல்கிறேன் நான் எந்தத் தவறும் செய்யவில்லை. சிவநினைவுடன் இருக்கிறேன். சிவனைப் பூசிக்கிறேன். கொடிய விசத்தை அமிழ்தமாக ஏற்று உண்ட சிவபெருமான் பிறவிப்பிணியில் மூழ்கிக் கிடப்பவர்க்கு அருமருந்தானவன் என்றும், பற்றற்று அவனை வணங்கினால் வணங்குகின்றவர்களைத் தனக்கே சொந்தமாக்கிக் கொள்வான் அதனால் சொந்தமாக்கிய என்னை விலைபேசி வில் அல்லது அடைமானம் வை; இவ்வாறு சொல்வதைத் தவிர வேறு எதுவும் என்னால் செய்ய முடியாது. உன் அருளுக்குப் புதியவனாக வந்திருக்கும் என்னை வெறுமனே விட்டுவிடாதே என்று இரந்து கேட்கிறேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனிடம் கெஞ்சுவதாக ஆச்சிரமத்தில் பேசுவீர்கள். அது போல யாரும் என்னை எதையும் சொல்லட்டும். கொல்லவேண்டுமானாலும் கொல்லட்டும். அடிக்க வேண்டுமென்றால் அடிக்கட்டும். கலையரசி என்னிடம் பணம் பறிப்பதற்காக இவ்வாறு நாடகமாடுகிறாள். அதனால் வல்லிபுரத்திற்குப் பாதிப்பு உண்டாகக் கூடாது. அதில் நான் மிகுந்த கவனத்துடன் இருக்கிறேன். இதைச் சொல்லத்தான் நான் இங்கு வந்தேன்" என்றான் மகாலிங்கம்.

**19) மடங்க என் வல்வினைக் காட்டை நின்மன் அருள் தீக் கொளுவும்**

**விடங்க என் தன்னை விடுதிகண்டாய் என் பிறவியை வேர்**

**ஒடுங்களைந்து ஆட்கொள் உத்தரகோச மங்கைக்கு அரசே**

**கொடும் கரிக்குன்று உரித்து அஞ்சுவித்தாய் வஞ்சிக் கொம்பினையே.**

மரகதமும் கதிரேசனும் மகாலிங்கமும் மாட்டுத் தொழுவத்தில் உள்ள சிவலிங்கத்துக்கு அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது தனபாலசிங்கம் அங்கே வந்தார். அவரைக் கண்டதும் மரகதம் மெதுவாக நழுவிச் சென்றுவிட்டாள். "என்ன பிரச்சினையோடு வருகிறாரோ தெரியவில்லை" என்று மனம் குழம்பினார் கதிரேசன். தனபாலசிங்கம் முன்கோபக்காரன். எதையும் ஆராயாது பேசுவார். பின்பு மனைவி அல்லது மகன் பொறுமையாகச் சொன்னால் அதைக் கேட்டு நடப்பார்.

தனபாலசிங்கம் வந்து கதிரேசனின் கையைப் பிடித்தவாறு சொன்னார்; “அண்ணை என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். வயது வித்தியாசம் பாராது எல்லோரும் மதிக்கும் உங்களைச் சற்றுக் கடுமையாக ஏசிவிட்டேன். அதை அறிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னை அழைத்துச் சொன்னார்; “மகனே, நீ சிவபூசை செய்பவன். சிவபூசை செய்பவன் எல்லோரையும் மதித்தல் வேண்டும். கதிரேசனுக்கு உன்னைவிட இருபது வயது கூட. அத்துடன் ஊர்ப்பெரியவர் அவர். அவர் சிவனின் அருளைப் பெற்றபின்புதான் எதையும் செய்வார். உனது மகனும் மருமகளும் பெரும் சிவபக்தர்கள். உனது மகன்தான் அவளை விரும்பிக் கதிரேசனிடம் சென்று சொன்னவன். கதிரேசன் சிவனின் அருளைப் பெற்றபின்புதான் உன்னிடம் கதைத்தவர். அதைவிட உனது சிவநினைவைக் குழப்பக்கூடாதென்பதற்காக வல்லிபுரத்தை சிவன் தன்னைத் தொழச் செய்தவன். திருமணம் என்பது சிவனின் அருளால் பிறந்தன்றே தீர்மானிக்கப்படுவது. பின் தரகர்கள் சிவனின் கட்டளையை நிறைவேற்றுபவர்கள். அப்படி இருக்க நீ கதிரேசனுடன் கதைத்தது பிழை. சிவனை வணங்கும் அவர் உன் நடத்தையை மாற்றுவார்” என்றவர். நான் சிவனை வணங்கினேன். எனது மனைவி வந்து உங்களோடு கதைக்கச் சொன்னாள். அதனால் வந்தேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று கரங்குவித்தார் தனபாலசிங்கம்.

“எனக்கு உங்களது பேச்சுப் புதியதல்ல. என்னைப் பலர் பேசுவர். பின் வந்து வருந்துவார்கள்” என்றார் கதிரேசன்.

“சுவாமியார் ஆச்சிரமத்தில் எப்படித்தான் போதனை செய்தாலும் பலர் அதைக் கேட்கிறார்களே தவிரப் பின்பற்றுவதில்லை. நேற்றுச் சுவாமியார் பேசும்போது; “சிவனடியார்களே, மிகவும் கொடியதும், குன்று போன்றதுமான யானையைக் கொன்று அதன் தோலைச் சிவன் உரித்த செயலைப் பார்த்த அம்பிகை பயந்து நடுங்கினாள். என்றும் எனது கொடியவினை காடு போன்றது. அதை முழுவதும் அழிக்கும்படி உனது பேரருள் என்னும் ஞானாக்கினியைக் கொடுத்துவிடு. எனது பிறவிப் பிணியை வேர் அறக் களைந்தருள்க. என்னைக் கைவிட்டுவிடாதே” என்று பற்றுக்கள் அற்ற மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை வேண்டுகிறார். அப்படி இருக்க பற்றுக்களும், ஆசைகளும் கொண்ட மனிதர்கள் ஏன் சிவனைக் கும்பிடுகின்றனரோ தெரியாது. பன்றியோடு சேர்ந்த பசுவும் அது உண்பதை உண்ணும் என்பார்கள். பற்றற்ற என்றும் இன்பமாக இருக்கின்ற சிவனை வணங்குவோர் சிவனைப்போலப் பற்றற்று இன்பமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்து வணங்க வேண்டும். அப்படி இருந்து வணங்க

முடியாதவர்கள் சிவனை வணங்கத் தேவையில்லை. தவறி வணங்கினாலும் எந்தப் பயனும் கிடையாது” என்றவர். அதை நானும் கேட்டேன். எனது மனைவியும் கேட்டாள். அதனால் அவள் என்னைச் சிவனை வணங்க வேண்டாம்” என்றாள். அதன் பின்தான் எனது தவறு எனக்குப் புரிந்தது” என்றார் தனபாலசிங்கம்.

**20) கொம்பர் இல்லாக் கொடிபோல அலமந்தனன் கோமளமே**

**வெம்புகின்றேனை விடுதிகண்டாய் விண்ணர் நண்ணுகிலா**

**உம்பர உள்ளாய் மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே**

**அம்பரமே நிலனே அனல் காலொடு அப்பு ஆனவனே.**

மகாலிங்கம் தனபாலசிங்கத்தைக் கண்டதும் பயந்து போனார். அவர் சிவபக்தராக இருந்தாலும் சண்டியர். தன்னை எதிர்ப்பவர்களை ஆள்வைத்து அடிப்பவர். அதனால் வல்லிபுரத்தைத் தான் சந்திப்பதை அறிந்துதான் வந்திருக்கிறரோ எனப் பயந்தார். அவரது உடல் நடுங்கியது. அதனால் அவர் அவ்விடத்தை விட்டுச் செல்லவிரும்பி, “கதிரேசண்ணை நான் வரப்போறன்” என்றார். அதைக்கேட்டுத் திரும்பிய தனபாலசிங்கம், “நான் உங்களையும் தேடினனான். பலரிடம் சொல்லியனுப்பினேன். யாரும் சொல்லவில்லையா..?” என்று கேட்டார். அதைக்கேட்ட மகாலிங்கத்திற்கு உதறல் எடுத்தது. இருப்பினும் கதிரேசனுக்கு முன் அவர் எதையும் செய்யமாட்டார் என்ற நம்பிக்கை இருந்தபோதும், அவன் முழு முரடன். கதிரேசனின் சொல்லைக் கேட்பானா என்ற பயமும் இருந்தது.

“உங்களில் பிழை இல்லை மகாலிங்கண்ணை. இது கலையரசி உங்களது மைத்துனனோடு சேர்ந்து செய்யும் வேலை. அப்படி நீங்கள் தீய நடவடிக்கையில் ஈடுபட்டாலும் நான் உங்களைக் கோவிக்க மாட்டன். ஏனென்றால் சிவனை வணங்குபவர்கள் கோபம் கொண்டால் வணங்குவதற்கான பலனைச் சிவன் கொடுக்க மாட்டான் என்று சுவாமியார் நேற்று எனக்கு உபதேசித்தவர். அதனால் பயப்படாதேங்கோ” என்றார் தனபாலசிங்கம். இருப்பினும் மகாலிங்கத்திற்கு வேர்த்துக் கொட்டியது.

“சிவனே, நீ தேவர்களுக்கு எட்டாதவன். ஆனால் மெய்யடியார்க்கு இலகுவில் அகப்படுபவன். அத்துடன் பஞ்சபூதங்கள் எல்லாம் நீயே. என்றும் மாறில்லாத இளமையுள்ள அழகன். நான் அப்படியானவன் அல்ல பற்றிப்பிடித்து

வளர்வதற்கு கொழுகொம்பு இல்லாதவன். அதனால் அக்கொடி சுழல்வது போலச் சுழல்கிறேன். ஆட்டப்படுகிறேன், அசைக்கப்படுகிறேன், தடுமாறுகிறேன், தவிக்கிறேன் அப்படியான அபலையைக் காப்பாற்று என்று மாணிக்கவாசக சுவாமிகள் தனது சொல்மாலையான திருவாசகத்தில் கூறுவதாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்வார். அதை அப்படியே சிவனுக்குச் சொல்லி நானும் வணங்குகின்றேன். இனிமேல் எந்தத் தவறும் செய்ய மாட்டேன்" என்றான் மகாலிங்கம்.

21) **ஆனைவெம் போரில் குறும் தூறு எனப்புலனால் அலைப்புண்**

**டேனை எந்தாய் விட்டிடுதி கண்டாய் வினையேன் மனத்துத்**

**தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து**

**ஊனையும் என்பினையும் உருக்காநின்ற ஒண்மைனே.**

நகரில் பெரும் வர்த்தகரான சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் வந்து தான் சிவவிரத நாட்களில் ஆச்சிரமத்திற்கு வரும் சிவனடியார்களுக்கு உணவு கொடுக்க விரும்புவதாகச் சொல்லியும் சுவாமிகள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் சுப்பிரமணியம் ஒழுக்கமானவன் அல்ல. பலதீய செயல்களைச் செய்பவன். பொருள்களில் கலப்படம் செய்பவன். ஏழைகளுக்குக் கடனுக்குப் பொருட்களைக் கொடுத்துவிட்டு நாட்சென்றால் வட்டி வாங்குவான். யாராவது கொடுக்கப் பிந்தினால் தனது கையாட்களை வைத்து மிரட்டி வாங்குவான். பொருட்களை வாங்கியவர்கள் பயந்து தம்மிடம் உள்ள தங்க நகைகளைக் கொடுப்பர். அவனது மகன் கருணாகரன் தகப்பனை மிஞ்சியவன். அவன் ஆச்சிரமத்திற்குத் தனது தந்தையுடன் வந்து சுவாமியாரைச் சந்தித்தான். அப்போது கதிரேசனும் மகாலிங்கமும் அங்கு இருந்தனர்.

"சுவாமியார், வெள்ளிக்கிழமை பிரதோச விரதம். அன்று நாங்கள் இங்கு வரும் அடியவர்களுக்கு உணவும் ஏழைகளுக்குப் பொருட்களும், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கொடுக்க விரும்புகிறோம்" என்றான் கருணாகரன்.

"அன்று வாமதேவன் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்" என்று சுவாமியார் சொல்லும்போது கருணாகரன் குறுக்கிட்டுச் சொன்னான், "வாமதேவனை இன்னொரு நாளுக்குக் கொடுக்கச் சொல்லுங்கள். அவருக்கு நான் சொல்கிறேன். அவர் நான் சொன்னால் கேட்பார்" என்றார் சுப்பிரமணியம்.

“வாமதேவன் பயந்தவர். சுப்பிரமணியம் காடையன். அதனால் வாமதேவன் சம்மத்திப்பாரென்று சுவாமியாருக்கும் தெரியும். சுப்பிரமணியம் முன்பு கேட்ட போதெல்லாம் சுவாமியார் மறுத்தவர். பிறரைச் சுரண்டி சிவபக்தர்களுக்கு உணவு கொடுத்தால் அது பாவம் என்று நினைப்பவர் சுவாமியார்.

கதிரேசன் எதுவும் பேசவில்லை. சிறிது நேரத்தில் கருணாகரன் வாமதேவனைக் கூட்டி வந்தான்; “சுவாமி நான் அடியவர்களுக்குப் பலமுறை உணவு கொடுத்துள்ளேன். இன்னொரு நாள் கொடுப்பதானாலும் கொடுக்கிறேன்” என்றான்.

அன்று வெள்ளிக்கிழமை. பிரதோச நாள். பெரிய அளவில் சமையல் நடைபெற்றது. பொருட்கள் பலவும் கொண்டுவரப்பட்டன. ஆனால் அடியவர்கள் ஒருசிலர் தான் வந்திருந்தனர். அவர்கள் சுப்பிரமணியத்தின் வாடிக்கையாளர்கள். பொருட்களைக் கடனாக வாங்குபவர்கள். நேரங் கடந்தபோதும் வேறு எவரும் வரவில்லை.

சுப்பிரமணியம் திகைத்துப் போனார். கருணாகரன் கோபப்பட்டான். சுவாமியார் சொன்னார்; “சிவனடியார்கள் இரந்துண்பவர்கள். ஆனால் கொடுப்பவன் தீயவனானால் பல நாட்களாக உணவு உண்ணாத சிவனடியானும் அவனிடம் உணவு பெற்று உண்ணமாட்டான். உனது மகன் மக்களுடன் ஒருபோதும் மகிழ்வுடன் கதைப்பதில்லை. ஐம்புலன்களும் மதயானைகள். அவை சண்டையிட்டால் தரையிலுள்ள சிறு செடி, கொடிகள் மிதியுண்டு அழிந்துவிடும். அவ்வாறான கொடிய ஐம்புலன்களால் மாணிக்கவாசக சுவாமிகளே அலைக்கழிக்கப்பட்டார். அவர் சொல்கிறார், “ஐம்புலன்களும் என்னை ஆட்டிப் படைக்கின்றன. அப்படியிருந்தும் ஞானப் பிரகாசமான நீ, ஐம்புலன்களாலும் அலைக்கழிக்கப்படுகிற எனது உள்ளத்தில் வீற்றிருக்கிறாய். அப்போது எனது உள்ளத்துள் தேன், பால், கருப்பஞ்சாறு, அமிர்தம் போன்று பேரானந்தம் பெருக்கெடுத்து ஒளிந்து ஊனையும் எலும்பையும் உருக்கி என்னை உன்மயமாக்கட்டும். பொறிகளின் ஆதிக்கத்தில் என்னை ஒருபோதும் விட்டுவிடாதே என்று இரக்கிறார். யாருக்கும் தீங்கு செய்யாது எந்நேரமும் சிவனையே நினைத்திருக்கும் மாணிக்கவாசக சுவாமியையே பொறிகள் அலைக்கழிக்கின்றன என்றால் ஐம்புலன்களையும் அடக்காதவர்களை பொறி எப்படி ஆட்டி வைக்கும் என்று உணர்ந்து கொள்ளுங்கள். மக்கள் புண்ணியம்

செய்ய முடியாவிட்டாலும் பாவத்தைச் செய்யத் தயங்குவர். பாவம் செய்வது என்பது செயல்களால் செய்பவையல்ல. மனத்தில் நினைத்தாலும் அது பாவம் தான். உனது புலன்கள் ஏவுவதைச் செய்யாது நீ விரும்புபவற்றைப் புலன்களைக் கொண்டு செய்வீ. அப்படிச் செய்தால்தான் நீ மனிதனாக வாழ முடியும். வாமதேவன் மிகவும் ஏழை. அவன் அடுத்த பிரதோசத்தன்று உணவு கொடுக்கப் போகிறான். வந்து பார் ஊரில் உள்ள அனைவரும் வருவர். புண்ணியவான்கள் கொடுப்பதை ஏற்காது விடுவதும் பாவம். அதனால் புலன்களை அடக்கு. சிவனை வழிபடு. ஒழுக்கமாக வாழ். உன்னை அனைவரும் மதிப்பர்" என்றார்.

**22) ஒண்மையனே திருநீற்றை உத்தூளித்து ஒளி மிளிரும்**

**வெண்மையனே விட்டிடுதி கண்டாய் விடிலோ கெடுவேன்**

**அண்மையனே என்றும் சேயாய் பிறர்க்கு அறிதற்கு அரிதாம்**

**பெண்மையனே தொன்மை ஆண்மையனே அலிப் பெற்றியனே.**

"சுப்பிரமணியம் இந்த உடம்புக்கு மதிப்பில்லை. அது பெறுமதி இல்லாதது. உயிர் பிரிந்ததும் தேடுவாரற்றுப் போம். ஒரு நாள் கழிந்தால் துர்நாற்றம் வீசும். மனம்தான் மதிக்கப்படுவது. சிலர் பணக்காரராக இருக்கின்றனர். பணக்காரரது பணம் தான் மதிக்கப்படுகிறது. சிலர் பெரும் பதவி வகிக்கின்றனர். அவரது பதவிதான் மதிக்கப்படுகிறது. பணமுள்ளவனிடம் பணமில்லாது போனால் அவன் பிணம். பதவியிலிருப்பவன் ஓய்வுபெற்றால் அவன் சாதாரண மனிதனாகி விடுவான். ஒருவரிடம் ஏதாவது பெறவேண்டுமானால் அவருக்கு மதிப்பிருக்கும். பெற்றுவிட்டால் அல்லது அவர் கொடுக்காவிட்டால் மதிப்பிராது. சைவர்கள் திருநீறு பூசுவது தமது உடல் சாம்பலுக்குச் சமம் என்பதாலேயே. திருநீறு தியாகத்தின் சின்னம். அன்பின் மறு உருவம். பற்றற்ற நிலையை வெளிப்படுத்தல் ஆகியவற்றுக்காகத்தான் திருநீறு பூசப்படுகிறது. இத்தன்மைகளை வெளிப்படுத்தவே சிவன் திருநீற்றை அணிகிறான். அப்படியான சிவனைப் பார்த்து மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார்; "தியாகத்தின் சின்னமாகத் திருநீறு பூசித் திகழும் ஞானப்பிரகாசனே, நீ சிவனடியார்களின் உள்ளத்தில் திகழ்கிறாய். அதை சிவநினைவில்லாதவர்களால் புரிந்து கொள்ள முடியாது. உன்னை முழுமையாக அறிந்தவர்கள் யாருமில்லை. பெண்ணாய், ஆணாய், அலியாய் இருப்பவனே. என்னைத் தகாதவன் என்று தள்ளி வையாதே" என இரக்கிறார். அதனால் சிவனைச் சிவபூசை செய்து, திருநீறு அணிந்து

வழிபட்டுவிட்டு மற்றவர்களைவிட நான்தான் உயர்ந்தவன். பணக்காரன் என நினைத்துத் திமிருடன் வாழக்கூடாது. அப்படி வாழ்ந்தால் பணமுள்ளபோதே மதியாதவர்கள், பணம் இல்லாமற் போனால் மதிப்பார்களா…? நினைத்துப்பார். சிவனின் கருணையைத் தவிர உலகில் வேறு எதுவும் நிலைப்பதில்லை. அதுதான் மதிப்பைக் கொடுக்கும். விரும்பியவற்றைக் கொடுக்கும்” என்றார் கதிரேசன்.

**23) பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்கும் அன்பின்**

**வெற்று அடியேனை விடுதி கண்டாய் விடிலோ கெடுவேன்**

**மற்று அடியேன் தன்னைத் தாங்குநர் இல்லைஎன் வாழ்முதலே**

**உற்று அடியேன் மிகத் தேறி நின்றேன் எனக்கு உள்ளவனே.**

“கருணாகரா, வாலிப மிடுக்கும், இரத்தத் துடிப்பும், இளமையும் ஆராயாது பல தீயசெயல்களைச் செய்ய வைக்கும். நீ இளைஞன். இன்னும் திருமணமாகவில்லை. அப்படியிருக்க நீ தீயசெயல்களைச் செய்வதிலும், பிறருடன் முரண்படுவதையும் பலர் விரும்புவதில்லை. உனது தகப்பன் உனக்கு ஒரு பெண் பார்க்குமாறு பலரிடம் சொல்லியுள்ளார். அவர்கள் எவரும் அதைக் கணக்கில் எடுக்கவில்லை. அதற்குக் காரணம் திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர். ஒருவன் மிக மிக ஒழுக்கமுள்ளவனாகவும், சிவபக்தியுள்ளவனாகவும் இருந்தாலும் ஐம்பொறிகளையும் அடக்கியவனாக இருந்தால்தான் அவனை நம்பலாம். சிலர் இளவயதில் ஒழுக்கமாக இருப்பார்கள். பின் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் மாறிவிடுவார்கள். அப்படியானவர்களை நம்பிப் பெண் கொடுக்குமாறு கூறினால் பின்னர் பெண் கொடுக்கச் சொன்னவனைத்தான் பெண்ணின் உறவினர் குறை சொல்வர். என்னிடமும் உனது தகப்பனார் பலமுறை கூறியுள்ளார். நேற்று என்னைக்கண்டு உனக்கு முப்பத்திரண்டு வயது முடியப்போகிறது. பொறுப்புக்கள் இல்லை. என்னுடைய சொத்தெல்லாம் அவனுக்குத்தான். நல்ல ஒரு இடத்தில் பெண் பாருங்கள். நான் பல தடவைகள் சொல்லியும் நீங்கள் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை” என்றவர். நான் முயற்சித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அருமையாகக் கிடைத்த மானிட சரீரத்தைக் கொண்டு இவ்வுலக வாழ்க்கையில் கடவுளை வணங்கி நல்ல பலன்களைப் பெற்றுச் சிவனை அடைய முயலவேண்டும். முழுமையான பக்திமானான மாணிக்கவாசக சுவாமிகள் “தான் போலி வாழ்க்கை வாழ்வதாகவும், அதனால் தன்னைக் கைவிட்டால் தான் அழிந்து போய்விடுவேன்

என்றும் அதற்காகத் தன்னைக் கைவிட்டுவிடாதே” என்றும் இரக்கிறார். அத்துடன் உன்னைத்தவிர வேறு ஆதாரம் எனக்கில்லை. உன்னால்தான் என்னைக் கரைசேர்க்க முடியும். உன்னால் தான் நான் தெளிந்த நிலையை அடையப் பெற்றேன். அத்தர்யாமியாகவும், மூலப்பொருளாகவும் என்னுள்ளத்தில் எப்போதும் நீ இருக்கிறாய்” என்கிறார். போலியான சிவவேடம் பாவத்தையும், பழியையும் சேர்க்கும். முழுமையான சிவனடியானாக இரு. சிவனடியானாக வேடமிட்டு தீயவற்றைச் செய்யாதே. ஒவ்வொருவரும் தம்மைப் பெருமையாகவும், உயர்வாகவும் நினைக்கின்றனர். அது தவறு. பிறர்தான் உன்னை மதிப்பீடு செய்தல் வேண்டும். அவர்கள் யாரும் உன்னை நல்லவனென்று சொல்வதில்லை. அதனால்தான் பிற ஊர்களில் இருந்து பேசிவரும் திருமணங்களைக் குழப்புகிறார்கள். உண்மையான பக்தியான மாணிக்கவாசகர் தான் வேடதாரி என்கிறார். பெரும் பணக்காரன் நாலு முழ வேட்டியும் ஒரு துண்டும் போட்டுக்கொண்டு வந்து தான் ஏழை என்கிறான். இவ்வாறு தான் வாழ வேண்டும். இவ்வாறு வாழ்பவனுக்கு எந்தக் குறையும் வராது” என்றார் கதிரேசன்.

**24) உள்ளவே நிற்க இல்லள செய்யும் மையல் துழனி வெள்ளன்**

**அலேனை விடுதி கண்டாய் வியன் மாத்தடக்கைப் பொள்ளல் நல்**

**வேழத்து விரியாய் புலன் நின் கண் போதல் ஒட்ட மெள்ளனவே**

**மொய்க்கும் நெய்க்குடம் தன்னை எறும்பு எனவே.**

“கருணாகரா, எறும்புகள் நெய்க்குடத்தைத் தேடிச்சென்று மொய்ப்பதைப் போல ஐம்புலன்களும் தமக்குத் தேவையானவற்றைத்அ தேடிச் செல்லும். அவை ஒருபோதும் நல்லவற்றைத் தேடிச் செல்லாது. தீயவைதான் அதற்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். அவை இறைவனைத் தேடிச் செல்லாது சிற்றின்பங்களையே தேடிச் செல்லும் தன்மையின. நேற்று நீ குடித்துவிட்டு உனது நண்பர்களுடன் சேர்ந்து வேலாயுதத்தின் மகள் கலைவாணியுடன் தேவையில்லாத கதைகளைக் கதைத்துள்ளாய். வேலாயுதம் ஏழை, எனினும் பெரும் சிவபக்தன். கலைவாணி சிவனை மனமுருகித் தொழுபவள். அவள் கற்புள்ளவள். உயர்ந்த தொழிலில் உள்ளவள். அவள் காவல்துறையில் புகாரிட்டாளேயானால் காவல்துறையினர் உன்னைக் கைது செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்திருப்பர். அது அவளுக்கு விருப்பமில்லாததால் என்னிடம் வந்து சந்தித்துச் சொன்னாள். இன்னொருமுறை அவ்வாறு தகாத முறையில் நடக்க முயன்றால், உன்னைக் கைது செய்ய நடவடிக்கை எடுப்பாள். காதல்

என்பது இரு மாறுபாடில்லாத ஒத்த உள்ளங்கள் ஒன்றுகூடல். உனக்கு விருப்பமாக இருக்கலாம். ஆனால் அவள் உன்னை விரும்பமாட்டாள். நீ குடிப்பவன், மாமிசம் உண்பவன், பெண்களுடன் மதிப்பின்றி நடப்பவன். அவள் சிவபக்தை. மாமிசம் உண்ணாதவள். அவளது குடும்பத்தினர் ஒழுக்கமானவர்கள். புலன்கள் தகுதி தராதரம் பாராது கட்டறுத்து அலைக்கழிக்கும். அதைப் புரிந்து கொண்டு வாழப் பழக வேண்டும். அதைத் தவிர்க்க வேண்டுமானால் மெய்ப்பொருளான சிவனைப் பற்றற்று வணங்க வேண்டும். நீ மயக்கத்திற்கு உட்பட்டுப் பொய்யானவற்றைச் செய்து வீணாக அலைகிறாய். அத்துடன் பணக்காரன் என்ற திமிர் உனக்கிருக்கிறது. புலன்கள் மாணிக்கவாசக சுவாமியையே சிவனை வணங்கவிடாது தடுக்கிறது. "அப்படிப்பட்ட என்னைக் கைவிட்டு விடாதே" என்று மாணிக்கவாசக சுவாமிகள் இரக்கிறார். மெய்யடியார்களையே தம் போக்கிற்கு ஆட்டிப் படைக்கும் புலன்கள் சாதாரணமானவர்களை முழுமையாக விழுங்கிவிடும். உன்னைப் புலன்கள் விழுங்கிவிட்டன. அதிலிருந்து உன்னல் விடுபட முடியாது" என்றார் கதிரேசன்.

**25) எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால் அரிப்புண்டு அலந்த**

**வெறும் தமியேனை விடுதி கண்டாய் வெய்ய கூற்று ஒடுங்க**

**உறும் கடிப்போது அவையே உணர்வு உற்றவர் உம்பர்**

**உம்பர் பெறும் பதமே அடியார் பெயராத பெருமையனே.**

"ஐயா, கலைவாணியின் அழகு என்னைத் தடுமாற வைக்கிறது. அவளை நான் என்னுயிராக மதிக்கிறேன். அவள் நன்றாகப் படித்தவள். பெரும் உத்தியோகம் வகிப்பவள். இவையெல்லாம் காதலுக்குத் தடையில்லையே. மார்க்கண்டுவின் மகன் நிரஞ்சன் விவசாயி. பெரிதாகப் படிக்காதவன். அவனைக் கதிரவேலுவின் மகளான அன்னலட்சுமி காதலித்துத் திருமணம் செய்தவள். அன்னலட்சுமி பெரிய உத்தியோகத்தில் இருக்கிறாள். பெரும் பணக்காரி. அவள் நிரஞ்சனைக் காதலித்தாள் என்றால் என்னைக் கலைவாணி காதலித்தால் என்ன?" என்று கேட்டான் கருணாகரன்.

"காதல் வற்புறுத்தலாலோ, பலாத்காரத்தாலோ, பணம் பொருளுக்காகவோ வருவதில்லை. நிரஞ்சன் பெரும் சிவபக்தன். கோவிலில் எல்லாத் தொண்டுகளையும் விருப்புடன் செய்பவன். அன்னலட்சுமியும் பெரும் சிவபக்தை. இருவரும் சேர்ந்து கோவிலில் சிவனுக்குச் சேவை செய்பவர்கள். அவர்களைச்

சிவன் சேர்த்து வைத்துள்ளான். அதுபோல நடக்க வேண்டுமானால் முழுமையான அன்புடன் சிவனை வணங்கு. உனது தீய செயல்களையும், தீய நண்பர்களையும் கைவிட்டு விட்டு ஒழுக்கமுள்ளவனாக வாழ்ந்து சிவனை வணங்கு. சிவன் அவளின் மனதை மாற்றுவான். சிவனது மலர்போன்ற திருவடிகள் யமனது செயல்களையே மாற்றும் வல்லமை கொண்டவை. அத்திருவடிகளை மனதில் நிலைநிறுத்தத் தேவர்களாலும் முடியாது. ஆனால் சிவனது மோட்சம் என்ற திருவடி நிழலைச் சிவனடியார்கள் அடையப் பொறுவர். அப்படி அடைந்தால் அத்திருவடிகளை அடைந்தவர்கள் காலம் பூராகவும் அத்திருவடி நிழலில் இன்பமாக வீற்றிருப்பர். “சிறுமையான செயல்களில் எனது மனதை அலையவிடுபவன் நான். அதனால் இனிப்புப் பலகாரம் எறும்புகளால் அரிக்கப்படுவது போன்று நான் புலன்களால் அரிப்புண்டு அவதிப்படுகிறேன். என்னை நீ காப்பாற்றியருள்க” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை இரக்கிறார். சகல பற்றுக்களையும் நீக்கிய மாணிக்கவாசக சுவாமிகள் தன்னைச் சிவன் காப்பாற்ற வேண்டும் என்று இரக்கும்போது சகல பற்றுக்களையும் அளவுக்கதிகமாகக் கொண்ட உன்னை யாரும் விரும்பார். அப்படியிருக்க உன்னைச் சிவன் விரும்புவாரா யோசித்துப் பார்” என்றார் கதிரேசன்.

**26) பெருநீர் அறச் சிறுமீன் துவண்டு ஆங்கு நினைப் பிரிந்த**

**வெருநீர் மையேனை விடுதி கண்டாய் வியன் கங்கை பொங்கி**

**வரும்நீர் மடுவுள் மலைச்சிறு தோணி வடிவின் வெள்ளைக்**

**குருநீர் மதிபொதியும் சடை வானக் கொழு மணியே.**

“ஐயா, பெரிய கங்கை பொங்கி வரும்போது அதன் நீர்ப்பெருக்கில் தடுமாறுகின்ற தோணி போன்றவன் நான். அப்போது வெள்ளை நிறத்தில் ஒளிர்கின்ற திங்களை உனது முடியில் வைத்திருக்கும் செஞ்சுடரான நீதான் என்னைக் காப்பாற்றுவாய். குளத்தில் உள்ள நீர் வற்றும்பொழுது சிறு மீன்கள் துடிப்பதுபோன்று துடிப்பவன் நான். அத்தகைய என்னைக் கைவிட்டு விடாதே. என்று மாணிக்கவாசக சுவாமிகள் அஞ்சியதாக நேற்று ஆச்சிரமத்தில் உரையாற்றும்போது சுவாமிகள் சொன்னார். அறியாமையால் நான் இவ்வளவு காலமும் தீயசெயல்களைச் செய்துவிட்டேன். இனிநான் செய்ய மாட்டேன். கலைவாணியை நினைத்தால் என்மனம் என்றும் இல்லாத உவகை கொள்கிறது.

அவளது பேச்சால் நீர் வற்றிய குளத்தில் உள்ள மீன்கள் துடிப்பது போல எனது இருதயமும், மனமும், உணர்வுகளும் துடிக்கின்றன. அவளைப் பிரிந்து என்னால் வாழ முடியாது. நீங்கள் தான் பொங்கி வரும் கங்கைநீரில் தள்ளாடும் வள்ளம் போன்ற என்னைக் காப்பாற்றிக் கரை சேர்க்க வேண்டும்" என்று கதிரேசனின் காலைப் பிடித்தான் கருணாகரன். கதிரேசனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. சில மாதங்களுக்கு முன் தனபாலசிங்கத்துடன் கதைத்து வல்லிபுரத்தின் மகளைத் தனபாலசிங்கத்தின் மகனுக்கு திருமணம் செய்து வைத்தமையால் அவர் பெரிதும் பாதிக்கப்பட்டவர். இது அதைவிட மோசமான விடயம். வேலாயுதம் நான் சொன்னால் கேட்பான். ஆனால் கருணாகரனையும் தகப்பனையும் நம்ப முடியாது" என்று நினைத்தார் கதிரேசன்.

**27) கொழுமணியேர் நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்றுகுன்றி**

**விழுமடி யேனை விடுதி கண்டாய் மெய்ம் முழுதுங்கம்பித்து அழுமடி**

**யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளியெனைக் கழுமணி**

**யேயினனுங் காட்டுகண்டாய் நின் புலன்கழலே.**

கதிரேசன் திருவாசகத்தில் அளவுக்கதிகமான விருப்பமுடையவர். அவர் தினமும் சிவபுராணத்தைப் பாடித்தான் சிவனை வணங்குவார். ஒவ்வொரு பிரச்சினையின்போதும் சிவனிடம் அதைக்கூறி சிவபுராணத்தை ஓதுவார். அதன் பின்புதான் செயலில் இறங்குவார். வல்லிபுரத்தின் மகளின் திருமணத்தின் பின் அவர் பெரும் அவமானங்களைச் சந்திக்க நேர்ந்தது. அவரது மனைவியும் பிள்ளைகளும் சிவனை வணங்குங்கள், சிவனுக்குச் சேவை செய்யுங்கள் நாம் தடுக்கவில்லை. தீயவர்களுக்காப் பரிந்து பேசாதீர்கள். அது பாவம் இறுதிக்காலத்தில் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் வாழுங்கள் என்ற பின் அவர் தேவையில்லாத விடயங்களில் தலையிட விரும்புவதில்லை. இப்போது கருணாகரன் கலைவாணியை விரும்புகிறான். அவளது தந்தையுடன் பேசித் திருமணத்தைச் செய்து வைக்குமாறு இரக்கிறான். ஆனால் அவனை நம்பமுடியாது. மாணிக்கவாசகர், "மாதருடன் கலந்து சிற்றின்பத்தை அனுபவித்து அழிந்துபோன அறிவிலியாகிய என்னைக் காப்பாற்று என்றும், சிவன் மீதுள்ள பேரன்பால் உடல் சிலிர்த்து நடுங்கி அழிகின்ற பக்தர்களோடு என்னைச் சேர்த்துவை மாசிலாமணியே, உனது ஞானசொரூப வடிவத்தை எனக்குக் காட்டியருள்" என்கிறார். இது புதுமையானது. அவர் எந்தப் பெண்ணுடனும் உறவு கொள்ளவில்லை. ஆனால் பல பெண்களுடன் உறவு கொண்டு அழிந்து போகின்றவர்களைக் காப்பாற்று என்கிறார். பல பெண்களுடன் உறவு

கொள்பவனை யாராலும் மாற்ற முடியாது. ஆதலால் சிவனே அவர்களைக் காப்பாற்று என்று கேட்கிறார். கருணாகரன் பெண்கள் விசயத்தில் மிக மோசமானவன். அவன் தந்திரமாகப் பெண்களை வளைத்துப் பிடிப்பதில் வல்லவன். கலைவாணியை அடைய அவன் பல வழிகளை நாடினான். முடியவில்லை அதனால் தன்னைச் சரணடைந்து காரியம் பார்க்க நினைக்கிறான் என்று கதிரேசன் நினைத்தார். அது தான் உண்மை என்று உணர்ந்த கதிரேசன் சொன்னார்; "நான் கதைத்துப் பார்க்கிறேன்" என்றார். கருணாகரனுக்கு மிகுந்த மகிழ்ச்சி. காரியம் நடைபெற்று முடிந்ததாக நினைத்தான். இரண்டு நாட்களின் பின் அவன் வந்தபோது கதிரேசன் சொன்னார், "அவளுக்கு வேறு இடத்தில் திருமணம் முற்றாகிவிட்டது" கதிரேசன் பொய்சொல்ல மாட்டார் என்று நினைத்த கருணாகரன் எதுவும் பேசாது நின்றான்.

**28) புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கொர் பொய்ந்நெறிக்கே**

**விலங்குகின் றேனை விடுதிகண்டாய் விண்ணும்**

**மண்ணுமெல்லாய் கலங்குமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்க்கு**

**கருணாகரனே துலங்குகின்றேனடி யனுடையாயென் தொழுகுலமே.**

கருணாகரன் சிறிது நேரம் அங்கு நின்றுவிட்டுச் சென்று விட்டான். கதிரேசன் மாட்டுத் தொழுவத்தில் இருந்த சிவலிங்கத்தின் முன்போய் நின்றார். கருணாகரன் தீயவன். எனினும் தன் வாழ்க்கையில் முதன்முதலாகப் பொய் சொன்னதை நினைத்து வருந்தினார். பெரும் நன்மை வருவதாக இருந்தாலும்கூடப் பொய் சொல்லக்கூடாது என்று நினைப்பவர் அவர். விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் அஞ்சி நடுங்கத் திருப்பாற்கடலில் ஆர்ப்பரித்து எழுந்த நஞ்சை அமிர்தமாக ஏற்றவனே, கருணாகரனே இன்று தவிர்க்க முடியாத காரணத்திற்காகப் பொய் சொன்ன என்னைக் காத்தருள். நான் உனக்குரியவன். நான் தினமும் காலையும், மாலையும் வணங்கும் விருப்புக்குரிய முதல்வன். உன்னையே சார்ந்திருக்கின்ற நான் புலன்களால் தடுமாற்றமடைந்து பொய் பேசிவிட்டேன். அதனால் என்னை மன்னித்துக் காத்தருள்வாயாக. நான் பொய் சொல்லாது வேறு ஏதாவது செய்திருக்கலாம். ஆனால் அந்த நேரம் எனக்கு அது தோன்றவில்லை. என்னை மன்னித்துக்கொள், மன்னித்துக்கொள்" என்று கரங்குவித்தார். அவரையும் மீறி அவரது கண்கள் கலங்கின.

அப்போது அங்கு வந்த வேலாயுதமும் வல்லிபுரமும் அவர் கும்பிட்டுவிட்டு வரும்வரை பொறுத்திருந்தனர். அவர் கும்பிட்டுவிட்டு வெளியே வந்ததும்

வேலாயுதம் சொன்னான்; “ஐயா நான் இன்று மிகவும் மகிழ்வுடன் இருக்கிறேன். கலைவாணிக்கு அடிக்கடி கருணாகரன் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். அத்துடன் அடிக்கடி கலியாணத் தரகர்களையும் அனுப்பிக் கொண்டிருந்தவன். அதைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல, நீங்கள், “நஞ்சை உண்டு தேவர்களையும், மனிதர்களையும், அசுரர்களையும் காப்பாற்றிய நஞ்சுண்ட கண்டனான சிவன் சிவபக்தையான உனது மகளைக் காப்பாற்றுவான்” என்றீர்கள். நான் முன்பைவிடத் தீவிரமாகச் சிவனை வணங்கினேன். இத்துன்பத்தில் இருந்து எம்மைக் காப்பாற்று என்று இரந்தேன். சிவன் கருணைகொண்டு கலைவாணியுடன் வேலை செய்யும் ஒருவனைச் சேர்த்து வைத்துள்ளார். அவர்கள் கலைவாணியை விரும்பிக் கேட்டார்கள். நான் சம்மதித்து விட்டேன்” என்றார் வேலாயுதம்.

“சிவனே, மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல புலன்களால் ஆட்கொள்ளப்பட்டுப் பொய் சொன்னேன். அதை மெய்யாக்கி என்னைக் காப்பாற்று என்று தொழுதேன். அதை நிறைவேற்றிவிட்டாய்” என்று பெருமூச்சு விட்டார் கதிரேசன்.

**29) குலங்களைந் தாய்களைந் தாய்என்னைக் குற்றங்கொற்**

**றச்சிலையாம் விலங்கலெந் தாய்விட்டிடுதி கண்டாய் பொன்னின்**

**மின்னுகொன்றை அலங்கலந் தாமரை மேனியப் பாவொப்பி**

**லாதவனே மலங்களைத் தாற்கழல் வன்தயிரிற்பொரு மத்துறவே.**

அப்போது அங்கே கலைவாணி வந்தாள். அவளுடன் ஓர் அழகிய வாலிபனும் வந்தான். கலைவாணி கதிரேசனை வணங்கினாள். வேலாயுதம் கதிரேசனின் அருகில் வந்து; இவர் இளமுருகன். கலைவாணிக்கு நிட்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை. நீங்கள்தான் கலைவாணிக்கு வழிகாட்டியானவர். அத்துடன் அவள் படிப்பதற்கு பெரும் உதவிகளைச் செய்தவர். அதனால் தனது வருங்காலக் கணவனை உங்களுக்கு அறிமுகஞ் செய்வதற்காக அழைத்து வந்துள்ளாள். இருவரையும் ஆசீர்வதியுங்கள்” என்றார்.

“மகளே, நீ பெரும் சிவபக்தை. பொன்போல மின்னுகின்ற கொன்றை மாலையை அணிந்த சிவனின் அடிமை. அமுதமாகிய செந்தாமரை போன்ற திருமேனியையுடைய சிவனின் பக்தை. உனக்கு ஒரு குறையும் உண்டாகாது. ஒரு மணி நேரத்திற்கு முன் கருணாகரன் வந்து என்னைச் சென்று உன்னுடன்

கதைக்குமாறு கூறினான். என்னால் மறுக்கமுடியவில்லை. அதனால் உனக்குத் திருமணம் முற்றாகிவிட்டது என்று பொய் சொன்னேன். அவன் அதை நம்பிவிட்டான். அதன்பின் பொய் சொன்னமைக்காக வருந்தினேன். ஆனால் சிவன் என்னைக் காப்பாற்றி விட்டான். எப்போதும் அவன் தனது பக்தர்கள் துன்பப்பட விடமாட்டான். நீ நன்றாக இருப்பாய்" என்று வாழ்த்தினார் கதிரேசன்.

"ஐயா, நான் கற்கும்போது எவ்வளவோ உதவிகள் செய்தீர்கள். அப்போது திருவாசகப் புத்தகத்தைத்தந்து இதைப்படி. மாணிக்கவாசக சுவாமிகள் மனங்குழம்பியபோதெல்லாம் திருவாசகத்தைப் படித்து சிவனிடம் முறையிட்டவர். அதுபோலத் துன்பம் வரும்போது திருவாசகத்தைப் படித்து சிவனை மன்றாடு என்றீர்கள். நான் அப்படியே செய்து வந்தேன். மாணிக்கவாசக சுவாமிகள், "கடைகின்ற மத்துத் தயிரில் பொருந்தியவுடன் தயிர் சுழல்வதைப்போல என்னைப் பற்றிய பாசங்கள் ஐந்தால் நான் அலைப்புண்டு வருந்துகின்றேன். என்னுடைய துன்பங்களையெல்லாம் ஒழிக்க வல்லவனே, எனது பாசம், பற்றுக்களை அழித்துவிடு. மேருமலையை வில்லாகக் கொண்டவனே என்னைக் கைவிட்டு விடாதே" என்கிறார். நான் படிக்கும்போதும், இப்போதும் துன்பங்கள் வந்தால் மாணிக்கவாசக சுவாமிகளைப் போலத்தான் சிவனை வணங்குவேன். அப்போதெல்லாம் சிவன் என்னைக் காப்பாற்றியுள்ளான். இனிமேலும் காப்பாற்றுவான்" என்றாள் கலைவாணி.

**30) மத்தறு தண்தயி ரிற்புலன் தீக்கது வக்கலங்கி**

**வித்தறு வேனை விடுதிகண்டாய் வெண்டலையிலைச்சிக்**

**கொத்தறு போது திலைந்து குடர்நெடு மாலைசுற்றித்**

**தத்தறு நீறுட னாரச் செஞ்சாந்தணி சச்சையனே.**

சில நாட்கள் கழிந்தன. வேலாயுதம் சிவனை வணங்கினான்; "வெண்மையான மண்டை ஓடுகளைக் கோர்த்து மாலையாக அணிந்தவனே, கொத்துக் கொத்தாகவுள்ள கொன்றை மலர்களை மாலையாக கட்டி அணிந்தவனே, உடலெங்கும் வெண்ணீறு பூசியவனே, மெய்பொருளே உனது கிருபையால் எனது மகளுக்கு நல்லதொரு மாப்பிள்ளை கிடைத்துள்ளார். நான் வறியவன். குடியிருப்பது கூட இரவல் காணி. அப்படியிருந்தும் மிகவும் பெரிய

வசதியான குடும்பத்தில் எனது மகளைச் சேர்த்துள்ளாய். ஒரு சதம்கூட வரதட்சணை வாங்காது திருமணம் செய்ய அவர்கள் சம்மதித்தது உனது கருணை. இதற்கு நான் உனக்கு என்ன செய்யப் போகிறேன்" என்று உருகிக் கண்கலங்கிவிட்டுக் கண்களைத் திறந்தபோது கருணாகரனும் அவனது நண்பர்களும் நின்றனர். அவர்களைக் கண்டதும் அவரது உடல் வியர்த்து நடுங்கிது, "சிவனே, என்னைக் காப்பாற்று" என்றான்.

"கலைவாணிக்குத் திருமணம் நிட்சயமாகிவிட்டதாக அறிந்தேன், உண்மையா..?" என்று கேட்டான் கருணாகரன்.

"ம்" என்று வேலாயுதம் எதுவும் பேசாது நின்றார். அப்போது கதிரேசன் கோவிலுக்கு வந்தார். அவரைக் கண்டதும் கருணாகரனும் அவனது நண்பர்களும் மெல்ல விலகிச் சென்று சிவனை வழிபடுவதுபோலப் பாசாங்கு செய்தனர். அதைக்கண்ட கதிரேசன் நிலைமையை உணர்ந்து கொண்டார். கதிரேசனைக் கண்ட வேலாயுதம் நடுங்கியபடி கதிரேசன் அருகில் வந்து; "எனக்குப் பயமாக இருக்கிறது. மத்தைக் கொண்டு கடையும்போது கட்டியாக இருக்கும் தயிர் கரைந்து நீராவதுபோலத் திடமாக இருந்த எனது மனது கலங்கித் தவிக்கிறது. அதனால் கலங்குகிறேன்" என்று நடுங்கினான் வேலாயுதம்.

"பயப்படாதே, சிவனை நம்பு. வெண்மையான மண்டை ஓடுகளைக் கோர்த்து மாலையாக அணிந்து, கொத்துக் கொத்தாக உள்ள கொன்றை மலர்களை மாலையாகக் கட்டி கழுத்தில் சூடி, வெண்ணீறு அணிந்த சிவனை நம்பினால், கொடுமையான பல வழிகளாகத் தொடர்ந்து வந்து துன்பத்தைத் தரும் பிறப்பையே அறுப்பவன் சிவன் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். அதனால் பயப்படாது சிவனை நம்பு அவர் உன்னைக் காப்பார்" என்றார் கதிரேசன்.

**31) சச்சையனே மிக்க தண்புனல் விண்கால் நிலம்நெருப்பாம்**
**விச்சையனே விட்டிடுதி கண்டாய் வெளியாய் கரியாய்**
**பச்சையனே செய்ய மேனியனே யொண்பட அரவக்**
**கச்சையனே கடந்தாய் தடந்தாள் அடற்கரியே.**

“வேலாயுதம் அனைத்திற்கும் அடிப்படையான மெய்ப்பொருள் சிவன். அத்துடன் ஐம்பூதங்களாக மிளிர்பவனும் சிவன். அவன் வியப்புக்குரியவன். எல்லா நிறங்களிலும் ஒளிர்பவன். பாம்பைக் கச்சையாக அணிந்தவன். பெரிய கால்களையுடைய வலிமையான யானையைக் கொன்றவன். அப்படியான சிவன் யாரையும் கெடுக்க நினைக்கமாட்டான். மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை நிஜவுலக வாழ்வில் விட்டுவிடாதே என்று மன்றாடுகிறார். இதற்குக் காரணம் என்ன…? கேட்பதை எல்லாம் சிவன் கொடுப்பவன் என்ற நம்பிக்கை தானே. மழை பெய்யா விட்டாலும் விவசாயிகள் யாரைக் கேட்கிறார்கள்…? துன்பம் வந்தபோது அதை நீக்கும்படி மக்கள் யாரை வேண்டுகிறார்கள் சிவனைத்தானே. அதனால் எல்லாவற்றையும் மாணிக்கவாசக சுவாமிகளைப்போலச் சிவனிடம் ஒப்படைத்துவிட்டு மகிழ்வுடன் இருந்து திருவாசகத்தைப் பாடிச் சிவனைத் தொழு. மதயானையைக் காலால் உதைத்த சிவன் பக்தர்களுக்காக எதையும் செய்வான். மார்க்கண்டேயருக்காக யமனையே காலால் உதைத்த சிவனுக்கு கருணாகரன் ஒரு கேடா..? பயப்படாதே. பயம் என்பது சிறிது சிறிதாக மனிதனை விழுங்குவது. அப்படி விழுங்கப்பட்டால் புலன்கள் வலுவிழந்து பல்வேறுபட்ட கற்பனைகளை உருவாக்கும். பயத்தை நீக்கு, புலன்களை அடக்கு. சிவனை நம்பு, செயற்படு. உன்னை மிஞ்சி ஏதாவது நடந்தால் அதைச் சிவனிடம் ஒப்படை. அவர் கவனித்துக் கொள்வார்” என்று கதிரேசன் கூறியபோது வேலாயுதத்தின் மனம் தெளிவடைந்து உறுதியானது.

**32) அடற்கரி போல் ஐம்புலன்களுக்கஞ்சி அழிந்த என்னை**

**விடற்கரியாய் விட்டிடுதி கண்டாய் விழுந்தொண்டர் கல்லால்**

**தொடற்கரியாய் சுடர் மாமணியே கடு தீச்சுழலக்**

**கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங் கறைக்கண்டனே.**

கதிரேசனும் வேலாயுதமும் கதைத்துக் கொண்டு நின்றபோது அவ்வூர்க் காவல்துறை அதிகாரியான தாமோதரனும் மனைவியும் பிள்ளைகளும் காவல்துறையினரின் வாகனத்தில் வந்து இறங்கினர். அவர் வந்து கதிரேசனை வணங்கினார்; “பெரியவரே, வேலாயுதம் எமக்கு காய்கறி வகைகளைக் கொண்டு வந்து தருபவர். அவரது மகளுக்குத் திருமணமாம் வாழ்த்துக்கள். இரவு வீட்டுக்கு வா” என்று கூறிவிட்டு நிமிர்ந்து பார்த்தார். எதிரே கருணாகரனும்

அச்சுதனும் வேறு சிலரும் நின்றனர்; “பெரியவரே, ஊர்ப்பாடசாலையில் நேற்றிரவு சில பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. அதிபர் புகாரிட்டுள்ளார்; என்றவர், “அச்சுதா, பின்னேரம் காவல்துறை அலுவலகத்திற்கு வா, வராவிட்டால் தேடிவந்து கைது செய்வேன். தேடி வந்து கைதுசெய்தால் கரைச்சல்படுவாய். ஆதலால் குறித்த நேரம் வந்துவிடு” என்றவர் கதிரேசனின் பக்கம் திரும்பி, “இன்று எனது இளையமகனின் பிறந்த தினம். சிவனுக்கு அபிஷேகம் செய்யப் போகிறேன்” என்றார். கதிரேசனுக்கு தாமோதரனின் மனைவி பிள்ளைகளைத் தெரியும். அதனால் தாமோதரனின் மகன் சிவப்பிரியன். கதிரேசனின் அருகில் வந்து; “தாத்தா, என்று அன்போடு அழைத்தான். கதிரேசன் ஐந்து வயதுநிரம்பிய சிவப்பிரியனைத் தூக்கி முத்தமிட்டுவிட்டுச் சொன்னார்; “உன்னை வாழ்த்த நான் பின்நேரம் வருகிறேன். சிவனை வணங்கு. பெற்றோரின் சொல்லைக் கேள். பெற்றோரைக் காலையில் வணங்கு” என்றார்.

“காலையில் நான் அப்பாவையும், அம்மாவையும், சிவனையும் வணங்கி விட்டேன்” என்றான். தாமோதரன் கோவிலுக்குள்ச் சென்றார்.

“வேலாயுதம், காவல்துறை அதிகாரியான தாமோதரன் மிகவும் நல்லவர். ஒழுக்கமானவர். சிவபக்தர். சிவனைப்போல உனக்கு உதவுவார் கவலைப்படாதே. சிவன், மேலான சிவனடியார்களைத் தவிர மற்றவர்களுக்கு எட்டாதவன். ஞானசோதியான அவன் கடல்நீரை ஆவியாக்கும் கடமுகா அக்கினியையே நிலைகுலையச் செய்து கடலைக்கலக்கிய விசத்தை அமிர்தமாக ஏற்று உண்டவன். அப்படியான சிவன் உனக்குத் தாமோதரன் மூலம் பாதுகாப்பு வழங்குவான். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தைப் பாடிச் சிவனை வணங்குவோரை அவன் துன்புறுத்தமாட்டான். அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள், “சிவனே கொடுமை மிகுந்த வலிய ஐம்பொறிகளுக்கு அஞ்சி மனத் தடுமாற்றத்துடன் இருக்கிறேன். அதனால் உனக்கு வேறுபட்டவனாகப் பிரித்திருக்க முடியாத என்னை ஆட்கொண்டருள்வாயாக” என்று உரிமையோடு கேட்கிறார். சிவனை நாள்தோறும் பற்றின்றித் தொழும் நீ சிவனுக்கு மிகவும் வேண்டியவன். அதனால் துணிவுடன் இரு. உனது மனம் வேதனைப்படும்படி எதுவும் நடவாது” என்றார் கதிரேசன்.

**33) கண்டது செய்து கருணைமட்டுப்பரு கிக்களித்து**

**மிண்டுகின்றேனை விடுதிகண்டாய் நின் விரைமலர்த்தான்**

**பண்டு தந்தாற்போற் பணித்துப் பணிசெயக் கூவித்தென்னைக்**

**கொண்டெனெந் தாய்களை யாய் களையாய குதுகுதுப்பே.**

கதிரேசண்ணை, நீங்கள் இவ்வாறு கூறியபின் நான் ஏன் அஞ்சப் போகிறேன். சிவன் எனது தலைவன். அன்புக்குரியவன். நெருக்கமானவன். அவனது அருளாகிய தேனைப் பருகுவார் எதற்கும் அஞ்சார். சிவச்செருக்கு அவர்களிடம் மிகுந்து காணப்படும். அந்தச் செருக்கோடு வாழ்கின்ற என்னைச் சிவன் கைவிடமாட்டான். ஏனென்றால் தினமும் சிவனை வணங்கும்போது மாணிக்கவாசக சுவாமிகள் வேண்டுவதுபோல, “தந்தையே, உன்னை வணங்கியபோதும், நம்பிக்கை வைத்தபோதும் மதம் பிடித்த புலன்கள் என்னைச் சிலசமயம் ஆட்டிப்படைக்கின்றன. அந்த வேளையில் எனது மனம் தறிகெட்டலையாது காப்பாற்று. நறுமணம் நிறைந்த உனது மலரடிகளை முன்பு கொடுத்தருளுவது போன்று எப்பொழுதும் கொடுத்தருள். என்னைத் திருத்தொண்டுகள் பலவும் செய்யவைத்து உன்னோடு சோத்துக்கொள். என்னிடம் ஏதாவது குற்றம் குறைகள் இருந்தால் அவற்றை முழுமையாக நீக்கிவிடு. எனது குடும்பத்தை உன்னிடம் ஒப்படைத்தாதால்தான் இன்று எனது மகளுக்குப் பெருவாழ்வு கிடைத்துள்ளது. அதனால் நீ எனது குடும்பத்தைக் காப்பாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. என்று தான் நான் தினமும் தொழுவேன். அதனால் சிவனுக்கு மிக நெருக்கமாகிவிட்டேன். எனக்குத் தீமை செய்ய நினைப்பவர்கள் சிவனுக்கு நெருக்கமானவர்கள் அல்ல. அப்படி இருக்க நான் ஏன் பயப்பட வேண்டும்” என்றான் வேலாயுதம். அதைக்கேட்ட கதிரேசன் மகிழ்வுடன் சிரித்தார்.

**34) குதுகுதுப்பின்றி றென் குறிப்பேசெய்து நின் குறிப்பில்**

**விதுவிதுப் பேனை விடுதிகண்டாய்விரை யார்ந்தினிய**

**மதுமதுப் போன்றென்னை வாழைப்பழத்தின் மனங்கனிவித்து**

**எதிர்வதெப் போது பயில்வி கயிலைப் பரம்பரனே.**

அச்சுதன் தயங்கித் தயங்கி வேலாயுதத்தின் அருகே வந்து சொன்னான்; “நீங்கள் எனது இனத்தவர். இருந்தும் ஆசை வசப்பட்டுக் கருணாகரனுடன் சேர்ந்து உங்களுக்குத் தீமை செய்துவிட்டேன். எனது தந்தையும் தாயும் மனைவியும் நீங்கள் எமது நல்ல உறவினன் என்றும் அவருக்குத் துரோகம்

செய்தால் சிவன் உங்களைத் தண்டிப்பார் என்றும், வேலாயுதமும் மகளும் சிவபக்தர்கள், மெய்யடியார்கள், மேலான பக்தர்கள், சிவனுக்கு நெருக்கமானவர்கள். அவர்களுக்குத் தீமை செய்வோர் தண்டனையை அனுபவிப்பர் என்று கூறியபோதும் புலன்கள் என்னை அதைப்பறறிச் சிந்திக்கவிடாது மதுவுக்கும், பொருளுக்கும் ஆசைப்பட்டதால் தீங்கு செய்து விட்டேன். எமது பாடசாலையில் திருட்டு நடைபெற்றது. அதிபர் நானும் நண்பர்களும்தான் திருடியதாகப் புகாரிட்டுள்ளார். அதனால்தான் தாமோதரன் ஐயா பின்னேரம் வரச் சொன்னவர். நான் திருடவில்லை. இருந்தும் உங்களுக்குச் செய்த துரோகத்திற்குத்தான் சிவன் என்னைத் தண்டிக்கிறார். தயவுசெய்து என்னைக் காப்பாற்றுங்கோ" என்று அழுதான் அசசுதன்.

"மகனே, கைலையில் வீற்றிருக்கும் மேலான மூலப்பொருள் சிவன். அவன் தன்னைச் சார்ந்திருப்பவர்களை எப்போதும் காப்பாற்றுவான். அவன் அவர்களுடன் கூட இருப்பதால் தீயவற்றைச் செய்ய விடமாட்டான். வேலாயுதம் சிவனையும் சிவனடியார்களையும் சார்ந்திருப்பவன். அவனுக்குத் துன்பம் வந்தால் சிவனடியார்கள் உரிமையுடன் சிவனைத் தட்டிக் கேட்பர்ர்கள். அடியவர்களுக்கு அடியவன் சிவன். இதைப்பலர் உணர்வதில்லை. சிவனடியார்கள் தமக்குத் தோன்றியதைச் செய்வார்கள். பின்பு அது சிவனின் அருட்செயலாக மாறிவிடும். அன்று கருணாகரன் கலைவாணியைத் தனக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கேட்டவன். நான் அவளுக்குத் திருமணம் வேறோர் இடத்தில் நிட்சயிக்கப்பட்டு விட்டது என்று பொய் சொன்னேன். அதற்காக நான் வருந்தினேன். பின் அதுவும் சிவனது அருட்செயல் என்று நினைத்தேன். எனினும் மனம் கலவரப்பட்டது. சிறிது நேரத்தில் அங்கு என்னைத் தேடிவந்த வேலாயுதம் தனது மகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் முற்றுப்பெற்றுவிட்டது என்றான். அதைக்கேட்ட எனக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல தனது அடியார்களின் தவறான செயல்களைக்கூட நியாயப்படுத்தி விடுவான் என உணர்ந்தேன். இவை சிவனின் திருவிளையாடல். சிவன் தெளிந்த தேன் போன்றவன். உரித்த வாழைப்பழத்தைப் போன்றவன். அவ்வாறு பக்தர்களைப் பக்குவப்படுத்துவதற்கான பயிற்சிகளைத் தனது அடியார்களுக்குக் கொடுத்தருள்வான் என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். இதைச் சிவனுடன் தொடர்புள்ளவர்கள் மட்டும் உணர்ந்து கொள்வர். நீ சிவபக்தனாக இருந்திருந்தால் காவல்துறை அதிகாரி உன்னைக் காவல் நிலையத்திற்கு வருமாறு கூறியிரார். இனியாவது உனது போக்கை மாற்றச் சிவனைத் தொழு" என்றார் கதிரேசன்.

**35) பரம்பரனே நின்பழஅடி யாரொடும் என்படிறு விரும்பரனே
விட்டிடுதி கண்டாய்மென் முயற்கறையின் அரும்பர நேர்வைத்
தணிந்தாய் பிறவியை வாயரவம் பொரும்பெரு மான்வினை
யேன்மனம் அஞ்சிப் பொதும்பறவே.**

கதிரேசன் காவல் நிலையத்திற்குப் புறப்பட்டபோது நல்லைநாதன் வந்து கேட்டான், "இப்போ ஏன் காவல் நிலையத்திற்குச் செல்கிறீர்கள்".

கதிரேசன் சிரித்தார். அந்தச் சிரிப்பைப் புரிந்து கொண்ட நல்லைநாதன் சொன்னான்; உங்களைப்பற்றி எனக்குத் தெரியும். உந்தச் சிரிப்பு கள்ளத்தனத்தை வெளிப்படுத்துகிறது. பாடசாலையில் சில பொருட்கள் களவு போனதாக அதிபர் காவல் நிலையத்தில் புகாரிட்டுள்ளார். அவர்கள் விசாரிப்பார்கள் தானே. அதைவிட எமக்கும் இச்செயலுக்கும் சம்பந்தமில்லை. பிறகேன் போகிறீர்கள்".

"அச்சுதன் வந்து தான் களவெடுக்கவில்லை என்று சத்தியம் செய்தவன். பார்க்கப் பாவமாக இருக்கிறது. அவனது கதையைப் பார்த்தால் அவன் திருடியிருக்க மாட்டான் என்று தெரிகிறது" என்றார் கதிரேசன்.

"இப்போ யாரையும் நம்பமுடியாது. அச்சுதனும் கருணாகரனும் குடித்துவிட்டு வேலாயுதத்திற்கு எவ்வளவு கொடுமைகள் செய்தவங்கள். இரவில் வேலாயுதத்தின் வீட்டுக்கு கல்வீசியதால் வேலாயுதத்தின் குடும்பம் இரவில் எங்கள் வீட்டில் வந்து படுத்துறங்கியது உங்களுக்குத் தெரியும். வேலாயுதம் காவல்துறை அதிகாரியின் வீட்டு வேலை செய்வதால் பலரைக் கைது செய்து அடித்தவர்கள். அப்படி இருந்தும் யாரும் செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி இருக்க அவனை நம்புகிறீர்களா?" நல்லைநாதன் ஆத்திரப்பட்டான்.

"நீ சொல்வது சரி, ஆனால், ஏனோ தெரியவில்லை. எனது மனம் பரிதவிக்கிறது. அவன் செய்திருக்கமாட்டான் என்று சொல்கிறது. இப்போ தாமோதரனைச் சந்தித்துக் கதைத்துவிட்டு வருவோம். யாராவது கேட்டால் சனசமூக நிலைய ஆண்டுவிழாவுக்கு விருந்தினராக அவரை அழைக்கச் சென்றோம் என்று கூறலாம்" என்றார் கதிரேசன்.

“நல்லை, ஒன்றோடு ஒன்று இணங்காதவையும் தரத்தில் வேறுபட்டவையும் ஆகிய சந்திரனும் பாம்பும் சிவனது முடியிலும் கழுத்திலும் இருக்கின்றன. அத்துடன் சம அந்தஸ்தும் பெற்று அருகருகே பகையின்றி இருக்கின்றன. சிவன் தீயவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதை நோக்காகக் கொண்டவன். மகாலிங்கம் வல்லிபுரம் போன்றோர் செய்யாத தீமைகளையா அச்சுதன் செய்கிறான். அவனைச் சென்று பார்த்தால் அவனது மனம் திருந்தும் என்று நினைத்துத்தான் செல்கிறேன். அனைத்திற்கும் மேலான அரன் அவன். அதனால் மாணிக்கவாசக சுவாமிகள், “சிவனே உனது பழைய அடியவர்களுடன் பொய் ஒழுக்கமுடைய என்னைச் சமமாக வைத்த நீ என்னைக் கைவிட்டுவிடாதே. பிறவியானது ஐந்து தலை நாகத்திற்கு ஒப்ப ஐம்பொறிகளின் வாயிலாக வந்து என்னை அச்சுறுத்துகிறது. பாம்புக்கு அஞ்சிய எலியானது பொந்தில் பதுங்குவது போன்று கர்மசொரூபமான எனது மனம் இந்த ஐம்பொறி நாகத்துடன் சண்டையிட அஞ்சி உன் அருள் என்ற பொந்தில் ஒதுங்குகின்றது” என்கிறார். பற்றுக்களின் கொடுமையினால்தான் பலர் தீயசெயல்களைச் செய்கிறார்கள். அச்சுதனின் தாயும் தந்தையும் ஆசிரியர்கள். இவன் தீயவர்களுடன் சேர்ந்து படிக்காது தீயவனாகிவிட்டான். அவனைத் திருத்தி ஒழுங்கானவனாக உங்களால் தான் முடியும் என்று தாயும் தந்தையும் நேற்று இரவு வந்து அழுது புலம்பினர். அதனால் மனம் நிலையில்லாமல் தவிக்கிறது. ஒரு சிவபக்தர்களான தாய்க்கும் தந்தைக்கும் பிறந்த அச்சுதன் தீயவனானது அவர்களுக்கு மிகுந்த கவலையைக் கொடுக்கிறது. அதனால் சிவனை வணங்கிவிட்டுச் செல்கிறேன். சிவன் ஒருபோதும் தீயவர்களுக்கும் தீமை செய்யார். மகாலிங்கம் உணர்ந்து திருந்தியதுபோல அச்சுதனும் உணர்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் என்ன என்ற எண்ணம் மனதில் தோன்றியதால் செல்கிறேன் நீயும் வா” என்றார் கதிரேசன்.

நல்லைநாதன் முன்பு ஆராயாது கோபப்படுவான். பின் எடுத்துச் சொன்னால் சமாதானமாகி விடுவான் என்பது கதிரேசனுக்குத் தெரியும்.

**36) பொதும்புறு தீப்போற் புகைந்தெரியப்புலன் தீக்கதுவ**

**வெதும்புறு வேனை விடுதி கண்டாய் வெண்ணகைக் கருங்கண்**

**ததும்புமந் தாரத்தில் தாரம் பயின்றுமந் தம்முரல்வண்டு**

**அதும்புங் கொழுந்தேன் அவிர்சடை வானத் தடலரைசே.**

மாலை ஆறுமணிக்கு வல்லிபுரம் தொழுவத்தைச் சுத்தம் செய்துவிட்டு சிவனுக்குத் தீபங்காட்டினார். அப்போது கதிரேசனும் மகாலிங்கமும் நல்லைநாதனும் அங்கிருந்தனர். அப்போது கருணாகரன் நன்றாகக் குடித்துவிட்டுத் தள்ளாடியபடி வந்து கதிரேசனது பாதங்களைப் பற்றி வணங்கினான். பின்பு விக்கிவிக்கி அழுதான். கதிரேசன் அதை எதிர்பார்க்க-வில்லை. நல்லைநாதனுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. தொழுவத்தில் இருந்த மாடுகளை அடக்கும் கம்பை எடுத்துக்கொண்டு வந்தார். அதைக் கண்ட கதிரேசன் சொன்னார்; கம்பைக் கீழே போடு. வல்லிபுரம் பசுக்களுக்கு அடிப்பதில்லை. அவை அவனது சொல்லைக் கேட்கும். ஒரு பாதுகாப்புக்காகத் தான் அவன் கம்பை வைத்திருப்பான். இப்போ சில நாட்களாகக் கம்பைக் கையில் எடுப்பதில்லை" என்று கதிரேசன் கூறும்போது நல்லைநாதன் சொன்னான்; "ஏன் இப்போ நான் பசுக்களுக்கு அடிக்கப் போகிறேன். கருணாகரனுக்குத்தான் அடிக்கப் போகிறேன்" என்றான் மிகுந்த கோபத்துடன்.

"அது எனக்குத் தெரியும். நீ தான் புரியாமல் பல செயல்களைச் செய்கிறாய். எதற்கும் பலாத்காரம் பரிகாரமல்ல. பலாத்காரம் நியாயத்தை மறைத்துவிடும். மேலும் மேலும் தவறுகளைச் செய்ய வைக்கும். கருணாகரன் இன்றா குடிக்கிறான். பத்துப் பதினைந்து வருடங்களாகக் குடிக்கிறான். இப்போ அவனை அடிக்க வருகிறாய். பொறுமையாக இரு என்னென்று கேட்போம்" என்றார் கதிரேசன்.

"ஐயா, நீங்கள் ஊருக்குப் பெரியவர். குடித்தால் நான் உங்களின் அருகே வருவதில்லை. அப்பாவுக்கு முன்னால் குடித்துவிட்டுச் செல்வேன். நான் உங்களை எனது தந்தைக்கு மேலானவராக நினைக்கிறேன். நான் பெண்களோடு உறவாடுபவன்தான். எனினும் கலைவாணிமீது கொண்ட காதலின் பின் நான் குடிக்க மாட்டேன். தீய செயல்களைச் செய்யமாட்டேன் என்று உங்களுக்கும் கலைவாணிக்கும் சத்தியம் செய்தேன். இருந்தும் கலைவாணி என்னைக் கெட்டவனாகவே கருதுகிறாள். அது அவளது விருப்பம். என்னால் கலைவாணியை மறக்க முடியவில்லை. அதனால் நன்றாகக் குடித்தேன். நன்றாகக் குடித்தபின் நஞ்சை அருந்திச் சாகநினைத்தேன். அதற்கு முன் உங்களைச் சந்தித்து எனது காதலை வெளிப்படுத்த நினைத்தேன். சரி நான் போயிட்டு வாறன்" என்று கூறியவன் நஞ்சு கொண்டு வந்த போத்தலை எடுத்துக் காட்டினான். கதிரேசன் நல்லைநாதனுக்குக் கண் காட்டினார். நல்லைநாதன் மெதுவாகச் சென்று கருணாகரனின் கையில் இருந்த நஞ்சுப்போத்தலை பறித்தெடுத்தார்.

“நான் வர்த்தகன். பல நஞ்சு வகைகளை விவசாயிகளுக்கு விற்பவன். அதனால் எனது முடிவை உங்களால் தடுக்க முடியாது” என்றான் கருணாகரன்.

“மகனே, வந்து இப்படி இரு. உயிரைச் சிவன் எமக்குத் தந்து மனிதப் பிறவியையும் தந்தது, பிறர்க்குதவவும், தன்னை வணங்கவும். சிவன் தந்த உயிரைச் சிவனே எடுக்க வேண்டும். நாம் அழிப்பது பாவம். உனக்கு நான் ஒரு பெண்ணைத் திருமணம் பேசுகிறேன். உனக்குச் சம்மதமா…? என்று கேட்டார் கதிரேசன்.

“கடைசி வரையும் நான் திருமணம் செய்ய மாட்டன். நான் சாகப் போறன்” என்றான் கருணாகரன்.

“மகனே, உன்னைப்போலத்தான் கலைவாணி அவன்மீது அன்பை வைத்துவிட்டாள். அவனும் காதல் கொண்டு விட்டான். பின் எப்படி அவர்களைப் பிரிப்பது. அது பாவம் மட்டுமல்ல பிற்கால வாழ்வையும் பாதிக்கும். நான் கலைவாணிக்கு உன்னைப்பற்றிச் சொல்லி அதற்கு நான் பொறுப்பென்றேன். அதற்கு, அவள் தான் மூன்று வருடங்களாக அவனைக் காதலிப்பதாகவும் தாம் மனதளவில் கணவன் மனைவியாக வாழ்வதாகவும் சொன்னாள்” என்றபோது அவள் அப்படிச் சொன்னாளா…? அப்போ அவளை நான் விரும்பகச் கூடாது. எங்கிருந்தாலும் அவள் மகிழ்வுடன் வாழட்டும். எனக்குத் திருமணம் பேச வேண்டாம். அவளின் நினைவாகக் குடித்துக் குடித்துச் சாவனே தவிர இன்னொரு திருமணம் செய்யமாட்டேன்” என்று கூறிவிட்டு நடந்தான்.

“வெறி முறிந்தால் பேசியவை தெரியாது” என்றான் நல்லைநாதன்.

“அப்படிச் சொல்லாதே, காதலின் வலிமை, காதலித்துத் தோற்றவனுக்குத் தான் தெரியும் என்பார்கள். மாணிக்கவாசகர் காமத்தைப் பற்றி இவ்வாறு கூறுகிறார். என்றும் நிலைத்திருக்கும் பேராற்றல் படைத்த சிவனே, உனது சடையில் சூடிய மந்தாரப்பூவில் இருக்கும் இனிமையான தேனை எடுக்க வண்டுகள் உனது சடையில் மொய்க்கின்றன. தேனுண்ட வண்டுகள் சடையில் உறங்குகின்றன. தேனுண்ணும் வண்டுகளின் ரீங்கார ஒலியும், தேன் குடித்த வண்டுகளின் இனிமையான ஒலியும் இனிமையாகக் கேட்கிறது. வண்டுகள் உனது சடைமீது மொய்த்துப் பெருவாழ்வு பெறுகையில் நான் மரப்பொந்தினுள்

தீப்பற்றி எரிகையில் அதனுள் அகப்பட்ட குருவிபோல ஐம்பொறிகளின் ஆசை என்னும் காமத்தீயின் வெம்மையைத் தாங்கமுடியது தவிக்கிறேன்" என்கிறார். காமம் வலியது, கொடியது மனிதனை மிருகமாக்குவது என்று உனக்குத் தெரியும். கருணாகரன் தீய நண்பர்களின் செயற்கையால் அழிந்து போனான். அவன் ஒழுக்கமுள்ளவனாக இருந்தால் நானே முன்னின்று அவனுக்கு கலைவாணியைத் திருமணம் செய்து வைத்திருப்பேன்" என்றார் கதிரேசன்.

**37) அரைசே அறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச லென்னினல்லால்**
**விரைசேர் முடியாய் விடுதிகண்டாய் வெண்ணகைக் கருங்கண்**
**திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற் பதப்புயங்கா வரைசேர்ந்**
**தடர்ந்தென்ன வல்வினை தான் வந் தடர்வனவே.**

"நல்லைநாதா, மனிதன் குழந்தையாகப் பிறக்கும்போது எதுவும் அறியாததாகத்தான் பிறக்கிறது. பின்பு பெற்றோரின் வளர்ப்பும், பெற்றோர் சேர்த்து வைக்கும் உறவுகளும்தான் அவனை நல்லவனாகவும், தீயவனாகவும் மாற்றுகிறது. ஓர் உயிர் உடலை விட்டுச் சென்றதும் சிவன் அதன் பாவபுண்ணியங்களுக்கேற்ற கருப்பையை வழங்குவதாக எமது சமயம் கூறுகிறது. அதனால் நாம் அதை நம்பியாக வேண்டும். ஒருவர் முன்பு செய்த பாவங்களை நீக்கத்தான் சிவனால் மனித உடல் உயிரிற்கு வழங்கப்படுகிறது. இதை முதலில் பெற்றோர் உணருதல் வேண்டும். கருணாகரனின் தந்தையைப் பற்றி உனக்குத் தெரியும். செய்யக்கூடாத தீமைகளை அவன் செய்தவன். அத்துடன் தீயவர்களைச் சம்பளத்திற்கு வைத்துத் தனது எதிரிகளைச் சமாளித்தவன். தீயவர்களின் சேர்க்கை கருணாகரனுக்கு இளவயதிலேயே கிடைத்துவிட்டது. கருணாகரன் தனது தந்தையும் நண்பர்களும் குடிப்பதைப் பலமுறை கண்டிருக்கிறான். எப்போதும் மதுபானம் அவனது வீட்டில் இருக்கும். அதனால் கருணாகரன் அதை எடுத்துக் குடித்தமையால் தான் அப்பழக்கம் உண்டானது. அது தடுக்க முடியாதளவிற்கு வளர்ந்து விட்டது. மனிதர் தாம் முற்பிறவியில் பாவம் செய்திருந்தால் அதை இப்பிறப்பில் நீக்க வேண்டும் என்று நினைக்காது தொடர்ந்து பாவம் செய்தால் தீவினை தேடிவந்து சூழும். அதை நீக்கவேண்டுமானால், "வெண்முத்துப் பற்களையும், கடல்போன்ற கரிய நிறக் கண்களையும் உடைய உமாதேவியின் பாகனான சிவனைத் தொழுதல் வேண்டும். அத்துடன் பொன்போன்ற மேனியையும், நாகத்தை விருப்புடன் அணிந்தவனுமான சிவனைப் போற்றிப் புகழுதல் வேண்டும். இல்லாவிட்டால்

இரண்டு மலைகள் ஒன்று சேர்ந்து நெருக்குவது போன்ற துன்பத்தை நல்வினையும் தீவினையும் சேர்த்துக் கொடுக்கும். அப்படியான நிலையில் நான் இப்போது இருக்கிறேன். ஆதலால் உலகின் அரசனே, மணம் நிறைந்த பூக்களை சடையில் அணிந்தமையால் பாரமான சடையை உடையவனே, எனது அஞ்ஞானத்தை அகற்றி அபயம் தா" என்று மாணிக்கவாசக சுவாமிகள் வேண்டுவது போலக் கருணாகரன் வேண்டினால்தான் அவனது துயரம் தீரும். அதை நாம் செய்ய வேண்டும்" என்றார் கதிரேசன்.

**38) அடர்புலனால் நிற் பிரிந்தஞ்சி அஞ்சொல் நல்லாரவர்தம்**

**விடர்விட லேனை விடுதிகண்டாய் விரிந் தேயெரியுஞ்**

**சுடரனை யாய் சுடு காட்டரசே தொழும் பர்க்கமுதே**

**தொடர்வரி யாம் தமியேன் தனி நீக்குந் தனித்துணையே.**

கதிரேசனும் நல்லைநாதனும் கருணாகரனைத் தேடி அவன் செல்லும் இடங்களுக்குச் சென்றபோது அவனை எங்கும் காணவில்லை. மகாலிங்கம் வந்து அவன் சிவன்கோவிலில் நிற்பதாகச் சொன்னதும் இருவரும் சிவன்கோவிலுக்கு வந்தனர். சிவன் கோவிலில் தெற்கு வீதியில் நின்ற வேப்பமரநிழலில் கண்களை மூடியவாறு கருணாகரன் இருந்தான். உடலெங்கும் திருநீறு பூசியிருந்தான். அவனை வேடிக்கை பார்த்தவாறு பலர் நின்றனர். கதிரேசனைக் கண்ட வல்லிபுரம், "வாருங்கோ அண்ணை, இப்ப கருணாகரன் முழுமையாகத் திருந்திவிட்டான். இனிமேல் குடிக்க மாட்டானாம். தீய செயல்களைச் செய்ய மாட்டேன் என்றும் கூறினான். கேட்க மகிழ்ச்சியாக இருக்கு. ஆரவாரச் சத்தத்தால் கண்விழித்த கருணாகரன் கதிரேசனையும் நல்லைநாதனையும் வணங்கினான். பின்பு சொன்னான்; "சாகப்போன என்னைத் தடுத்து உலகின் இயல்பை விளக்கியவர் நீங்கள். பணம் அளவுக்கதிகமாக இருந்தமையால் எனது தந்தை பணத்தால் எதையும் செய்யலாமென்று வாழ்ந்தார். அவரைப் பின்பற்றி நானும் மிகவும் மோசமான வாழ்வை வாழ்ந்தேன். எவ்வளவு பணத்தைச் செலவு செய்தாலும் நல்ல ஒரு விடயத்தைச் செய்ய முடியாது என்று இப்போதுதான் உணர்ந்தேன். எனது பணத்தை அனுபவிக்கவே பலரும் என்னுடன் கூடினர். பலர் கலைவாணியோடு தாம் கதைப்பதாகக் கூறினர். சிலர் கதைத்தாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அவளுடன் கதைக்காது எனக்கேற்றவாறு அவள் கதைத்ததாகக் கூறி ஏமாற்றினர். நான் சில பெண்களோடு உறவு கொண்டது உண்மை. ஆனால் கலைவாணியைச்

சந்தித்தபின் நான் எந்தத் தீயசெயல்களையும் செய்யவில்லை. நான் பணத்தைச் செலவு செய்து பகட்டாக வாழ்ந்தநேரம் ஒழுக்கமுள்ளவனாகவும், சிவபக்தனாகவும் வாழ்ந்திருந்தால் நான் கற்றிருப்பேன். தீயசெயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டேன். சிவனை வழிபட்டிருப்பேன். அப்படி வாழ்ந்திருந்தால் என்னைக் கலைவாணி விரும்பியிருப்பாள். கதிரவேலுவின் மகள் அன்னலட்சுமி நல்ல அழகி. படித்துப்பட்டம் பெற்று பெரிய உத்தியோகம் பார்ப்பவள். அவள் பெரிதாகப் படிக்காத விவசாயம் செய்யும் நிரஞ்சனைக் காதலித்துக் கலியாணம் செய்தவள். அதற்குக் காரணம் நிரஞ்சன் பெரும் சிவபக்தன். ஒழுக்கசீலன். அவளோடு சேர்ந்து கோவில் தொண்டுகள் பலவும் செய்பவன். அதனால் அவள் அவனை விரும்பித் திருமணம் செய்து மிகவும் வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்கின்றனர். இவற்றை நான் அறிந்தும் பணத்தால் அவளை விரும்பச் செய்யலாமென நினைத்து ஏமாந்து விட்டேன். அத்துடன் என்னை மதிப்பவர்கள் யாரும் இல்லை. கன்னிப்பெண்கள் என்னைக் கண்டால் மறைந்து விடுவர். இவற்றை நினைக்க எனக்கு வேதனையாகவுள்ளது. அதனால் உங்களைக் குருவாக ஏற்றுச் சிவனுக்குத் தொண்டுகள் செய்து வாழ விரும்புகிறேன்" என்றான் கருணாகரன்.

"கருணாகரா, உனது கொள்கைகளைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. மாணிக்கவாசக சுவாமிகள், "எங்கும் வியாபித்துள்ள சோதிப்பிழம்பே, தொண்டர்களுக்கு அமிழ்தே, யோகத்தால் அன்றி அடைய முடியாதவனே, வேறு துணையற்ற எனக்கு, ஒப்பற்ற துணையே, துன்புறுத்துகின்ற இந்திரியங்களுக்கு வசப்பட்டு, உனக்கு வேறுபட்டவனாகி, சிற்றின்பம் எனும் காட்டில் அகப்பட்டு அங்கேயே அல்லலுற்றுக் கிடக்கின்றேன். என்னைக் காப்பாற்று" என்று வணங்குகிறார். அதனால் நீ திருவாசகத்தைப் பொருளுணர்ந்து படி. சிவன் இலகுவாக உனக்கு அகப்படுவான். அவனின் அருள் இருந்தால் இன்பமான வாழ்வு அமையும். மகிழ்ச்சியாக வாழலாம்" என்றார் கதிரேசன்.

"உண்மைதான் ஐயா, எனக்கு அதைப்பற்றி எனது தந்தை சொல்லாமையால் தான் இந்த நிலை ஏற்பட்டது. என்னுடன் படித்த பலர் சிவனருளால் மிகவும் உயர்வாக வாழ்கின்றனர். அந்த இரகசியம் இப்போது தான் எனக்கு விளங்குகிறது" என்றான் கருணாகரன்.

**39) தனித்துணை நீ நிற்க யான் தருக்கித்தலை யால் நடந்த**

**வினைத்துணை யேனை விடுதிகண்டாய் வினை யேனுடைய**

**மனத்துணை யேஎன்தன் வாழ்முதலே எனக் கெய்ப்பில்வைப்பே**

**தினைத்துணை யேனும் பொறேன் துயராக்கையின் திண்வலையே.**

மகாலிங்கம் திடீரெனச் சுயநினைவை இழந்தமையால் வைத்தியசாலை-யின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். மூன்று தினங்களின் பின் அவருக்குச் சுயநினைவு திரும்பியது. அதனை அறிந்த கதிரேசனும் நல்லைநாதனும் அவரை நலம்விசாரிப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றனர். அவர்களைக் கண்டதும் மகாலிங்கம் கண் கலங்கினார்; "அண்ணை, திருவாசகத்தைப் பொருள் உணர்ந்துபடி என்று சொல்லி ஒரு நூலைத் தந்தீர்கள். அதைத் தினமும் நான் படிப்பேன். இருந்தும் எனது விரோதிகள் சிலர் கதைக்கக்கூடாத கதையைக் கதைக்கின்றனர். நான் முன்புபோல இல்லை என்று உங்களுக்குத் தெரியும். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல நான் கர்மங்களால் ஆக்கப்பட்டவன். எனது கல்மனம் கனியப் பண்ணியவன் சிவன். எனது உயிருக்குள் உயிராகவும் இருப்பவன் அவன். இப்போது நான் மிகவும் தளர்வுற்றிருக்கிறேன். இருப்பினும் எனது மனதுள் சிவன் சோதியாக வீற்றிருக்கிறான். இருப்பினும் பல சந்தர்ப்பங்களில் நான் நிலை தடுமாறிப் போய்விடுகிறேன். பற்றுக்களால் அவதிப்படும் என்னை கைவிட்டுவிடாதே என்றும், துன்பத்திற்கு இருப்பிடமான உடல் என்ற உறுதியான வலையில் அகப்பட்டுத் துன்பப்படுகிறேன். அந்தத் துன்பத்தை நீக்கிவிடு என்று வணங்குகிறேன். வாழ்ந்தது போதும்" என்றார் மகாலிங்கம்.

**40) வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு**

**மிலைத்தலைந் தேனை விடுதிகண்டாய் வெண்மதியின் ஒற்றைக்**

**கலைத்தலை யாய் கருணாகரனே கயிலாய மென்னும்**

**மலைத்தலை வாமலை யாம்மணவாள என் வாழ்முதலே.**

"ஒரு காலத்தில் நான் மிகவும் கெட்டவன். தீயசெயல்கள் அத்தனையையும் அஞ்சாது செய்பவன். வலையில் அகப்பட்ட மானின் பார்வையை உடைய பெண்கள் தரும் இன்பத்திற்காகப் பேயாய் அலைந்தவன். அதனால்தான் நான் திருந்திச் சிவனைத் தொழ ஆரம்பித்த பின்பும் சில

பெண்கள் பொருளுக்காக என்னைத் துன்புறுத்துகின்றனர். இப்போது நான் எந்தத் தீயசெயல்களையும் செய்வதில்லை. அதனால் திருவாசகத்தைத் தினமும் படிக்கிறேன். அதைப் படிக்கப் படிக்கச் சிவனின் மீதுள்ள பக்தி பெருகுகின்றது. இதை யாரும் நம்புவதில்லை. சந்திரசேகரா, கருணாகரா, கைலாயநாதா, பார்வதி சமேதரா எனது வாழ்விற்கு மூலாதாரமான தலைவா என்னைக் காப்பாற்று. முக்கியமாகப் பெண்களின் மயக்கத்தில் இருந்து காப்பாற்று என்று பிரார்த்திக்கிறேன் மனம் அல்லற்படுகிறது" என்றார் மகாலிங்கம்.

"மகாலிங்கம், மாணிக்கவாசகர் ஒரு தீர்க்கதரிசி. உலகில் நடைபெறும் அத்தனை விடயங்களையும் அறிந்தவர். இன்னும் ஆயிரமாண்டுகளுக்கு மட்டுமல்ல உலகம் அழியும் ஊழிக்காலம் வரையும் பின் ஊழிக்காலம் முடிந்து சிவன் புதிய உலகங்களைப் படைத்தபின்பும் நடைபெறுவதை அறிந்தவர். அதனால்தான் அவர் தன்னை உதாரணபுருசராகக் கொண்டு உலகில் வாழும் மனிதர்களால் செய்யப்படும் தீயசெயல்களைச் சிவனிடம் சொல்லி அவர்களைத் திருத்துமாறு கோருகிறார். இது யாரும் நினைத்துப்பாராத புதுமை. நீ இப்போது மாணிக்கவாசகர் வணங்கியதுபோலச் சிவனை வணங்க முயல்கிறாய். இப்படி உன்னைப்போல உலகில் வாழும் மக்கள் அனைவரும் தாம் தாம் செய்யும் தீயசெயல்களை நினைத்து வருந்தித் தமது துன்பங்களை நீக்க வேண்டுமென்று சிவனைக் கோர வேண்டும் என்பதே மாணிக்கவாசக சுவாமிகளின் விருப்பமாகும். அது நிறைவேறிவிட்டது" என்றார் கதிரேசன்.

41) **முதலைச் செவ் வாய்ச்சியர் வேட்கைவெந்நீரிற் கடிப் பமுழ்கி**
**விதலைச் செய்வேனை விடுதிகண்டாய் விடக் கூன்மிடைந்த**
**சிதலைச் செய்காயம் பொறேன் சிவனே முறையோ முறையோ**
**திதலைச் செய்பூண்முலை மங்கைபங்கா என்சிவகதியே.**

"மகாலிங்கம், உலகில் உள்ள துன்பங்களுக்கெல்லாம் முக்கிய காரணம் சிவந்த உதடுகளையுடைய மாதராகிய முதலைகள் என்கிறார். ஒழுக்கம் தவறிய பெண்கள் முதலைக்குச் சமமானவர்கள். அவர்களின் பிடியில் சிக்கிவிட்டால் சிக்கியவர்களை முழுமையாக அவர்கள் விழுங்கிவிடுவார்கள். அதற்காகத்தான் திருவள்ளுவர் காலத்தில் இருந்து அதைத் தவிர்க்கவேண்டும் என்று பெரியவர்கள் வற்புறுத்துகின்றனர். அன்பினால் பேசாமல் பொருளை விரும்பி இனிமையாகப் பேசும் பெண்களால் எப்பொழுதும் துன்பம் தான் வரும். அவர்கள்

கொடுக்கப்படும் பொருளின் அளவை அறிந்து அதற்கேற்றபடி பேசும் பெண்களின் உறவு கூடாது. அவர்கள் தரும் இன்பத்தை ஒழுக்கமானவர்கள் விரும்பமாட்டார்கள். தமது மனதைக் கட்டுப்படுத்த இயலாதவர்கள்தான் பொதுமகளிரின் காதலே தஞ்சம் என்றிருப்பர். அவர்கள் வஞ்சகம் நிறைந்தவர்கள். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பழகுவர். பொருள் கொடுத்தால் பெரும் இன்பம் தருவர். பொருள் கொடுக்காவிட்டால் பெரும் துன்பம் தருவர். இன்று உனக்கு அதுதான் நடந்தது. பொருள் கேட்டுவந்த கலையரசிக்குப் பொருள் கொடாததால் அவள் உன்னைக் கொடுமைப்படுத்தியுள்ளாள். அதனால்தான் நீ நோயுற்றாய். இருவகைப்பட்ட மனமுடைய பொது மகளிரும், கள்ளும், சூதும் ஒரு மனிதனைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிடும். அத்துடன் சுவர்க்க வாழ்க்கையையும் கெடுக்கும். அத்துடன் நீ பிறனுக்கு உரிமை உடைய மனைவியையும் விரும்பியுள்ளாய். அது மிகப்பெரிய பாவமாகும். ஆராய்ந்து பாராமல் பிறரின் மனைவியில் ஆசைப்பட்டு அவளுடன் சேருதல், எவ்வளவு பெருமை உடையவர்களுக்கும் இழுக்கானதாகும். பிறன் மனைவிமீது இச்சைகொண்டு அவள் தரும் இன்பத்தை மேலானது என்று எண்ணுபவர்களை பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கும் ஒருபோதும் விட்டு நீங்காது. அதை அறியாமல் வாழ்ந்த உனக்கு இப்போது கேடு வந்துள்ளது.. இதை மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை அத்துன்பங்கள் வந்தடைந்தாக நினைத்து உலகிற்கு ஒழுக்கத்தைப் போதிக்கிறார். அதனால் மாணிக்கவாசக சுவாமிகள் அப்படித்தான் வாழ்ந்தவர் என்று எண்ணிவிடாதே. மனித சுபாவம் எப்படியானது என்று தன்னைக் கொண்டு உலகிற்கு விளக்குகிறார். இந்தத் துணிவு வேறு யாருக்கும் வராது” என்றார் கதிரேசன்.

**42) கதியடி யேற்குன் கழல்தந்தருளவும் ஊன்கழியா**
**விதியடி யேனை விடுதிகண்டாய் வெண்தலை முழையிற்**
**பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்க அஞ்சி**
**மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே.**

“மகாலிங்கம், பொதுவாக மனிதர்கள் எல்லோரும் தமது உடலை மிகவும் கவனத்துடன் பேணுகின்றனர். அது மாறுபாடு அடையாதது என்று எண்ணி அதற்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொடுக்கின்றனர். அளவுக்கதிகமாகப் பேணுகின்றனர். இன்று எண்பது வயதைக் கடந்தவர்களும் தாம் இளம்

பருவத்தினர் என்று நினைத்துத் தம்மை வெகு சிறப்பாக அலங்கரிக்கின்றனர். உடல்தான் நான் என்ற நினைப்புத்தான் பலருக்கு இருக்கிறது. அதனால் நரைத்த தலைக்குக் கறுப்புமையிடுகின்றனர். வயது போனதால் விழுந்த பற்களுக்குப் புதிதாகப் பற்களைக் கட்டுகின்றனர். இது உடலை நான் என்று உணரும் நிலையாகும். உடல் வயதிற்கேற்ப தனது நிலையை மாற்றும். இதை யாராலும் தடைசெய்ய முடியாது. நீ சிவபக்தன் என்று சொல்கிறாய். சிவபக்தன் என்பவன் உடலை வெறுப்பவனாக இருத்தல் வேண்டும். சிவனை நினைப்பவன், வணங்குபவன் என்று வாயால் சொல்லலாம். ஆனால் அதை நிரூபிப்பது எப்படி..? நீ நரைத்த தலைமயிருக்கு மைபூசுகிறாய். உனக்கு நீ இளைஞன் என்ற நினைப்பு. ஆனால் உடல் தனது இயலாமையை அடிக்கடி வெளிப்படுத்தும். அது வெளிப்படுத்தும்போது அதை உணர்ந்து கொள்ளல் வேண்டும். தலைமயிர் நரைத்தல், பற்கள் விழுதல், தோல் சுருங்குதல் முதலியன உடல் தனது இயலாமையை வெளிப்படுத்தும் காரணிகள். அதை உணராது மைபூசுவதும், பற்களைக் கட்டுவதும் இளமையை உண்டாக்காது. உடல் இயலாமையை வெளிப்படுத்தும்போது நாம் அதை உணர்ந்து ஞானத்தை உணர்ந்து கொள்ளல் வேண்டும். கடவுளை வணங்க வேண்டும். தானதர்மங்கள் செய்தல் வேண்டும். ஒழுக்கமாக வாழ வேண்டும். இவற்றை விட்டுவிட்டு உடலை நேசிப்பதால் பேரின்பவாழ்வு கெட்டுவிடும். இதைப் பலர் உணர்வதில்லை. அதனால்தான் தீமைகளைச் செய்கின்றனர். உடல்தான் நான் என்று நினைக்காது சிவனருளால் பெற்றோர்கள் சூட்டிய பெயர்தான் நான் என்றும் ஆன்மா என்று நினைத்த ஞானிகளும், நாயன்மார்களும் இன்றும் வாழ்கின்றனர். மாணிக்கவாசக சுவாமிகள் திருவள்ளுவர், திருஞானசம்பந்தர் என்னும் பெயர்கள் ஊழிகள் மாறிமாறி வந்து உலகங்கள் யாவும் அழிந்தபோதும், பின் உலகைப் படைக்கும்போதும் அவையும் சேர்த்துச் சிவனால் படைக்கப்படும்போது அவை நிரந்தரமாக வாழும். சிவனின் வெள்ளை நிறமான கபாலத்தின் பொந்தில் பதுங்கியிருக்கும் பாம்பானது சிறிதாகப் படம் விரித்து ஆடிவிட்டுச் சுருங்குகிறது. அதைப் பார்த்துப் பயந்த பிறைச்சந்திரன் கங்கையில் மூழ்கி மறைந்தான். முரண்பட்ட இரண்டையும் தனது சடாமுடியில் வைத்துள்ள இறைவனான சிவன் எமக்கு ஞானத்தை அருளித் தனது திருவடி நிழலில் சேர்த்து வைக்க வேண்டும். அதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் நான் என்று உடலை நினைக்க மாட்டார்கள்" என்றார் கதிரேசன்.

**43) மன்னவனே யொன்று மாற்றியாச்சிறியேன் மகிழ்ச்சி**

**மின்னவனே விட்டிடுதி கண்டாய் மிக்க வேதமெய்ந்நூல்**

**சொன்னவனே சொற் கழிந்தவனே கழியாத் தொழும்பர்**

**முன்னவனே பின்னும் ஆனவனேயிம் முழுதையுமே.**

அன்று பௌர்ணமி தினம். பௌர்ணமி தினங்களில் ஏராளமான மக்களும், மாணவர்களும் ஆச்சிரமத்திற்கு வருவார்கள். அன்று சித்திரைப் பௌர்ணமியாகையால் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். தாயை இழந்த பிள்ளைகள் அன்று விரதமிருந்து பிதிர்க்கடன் செய்வர். பிதிர்க்கடன் செய்து முடிந்ததும் மதிய உணவு பரிமாறப்பட்டது. உணவை உண்ட மக்கள் ஆச்சிரம மண்டபத்துக்கு வந்தனர். சுவாமியார் உரையாற்றினார். “மாதா, பிதா, குரு, தெய்வம் என்றுதான் சமயம் முதன்மைப்படுத்தியுள்ளது. ஒரு கரு தாயின் வயிற்றில் இருக்கும்போது அது படும் துன்பங்களை மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லியிருக்கிறார். அத்துடன் கருவில் நடைபெறும் மாற்றங்களையும் விபரமாகக் கூறியுள்ளார். அவர் பாடலில் கூறியவற்றை வைத்தியரான திருமதி. மாதுமை சிவலிங்கம் உங்களுக்கு விரிவாகக் கூறியுள்ளார். பிள்ளை பிறந்தபின் பிள்ளையால் உண்டாகும் துன்பங்களைப்பற்றி ரவீந்திரன் அடிக்கடி கூறியுள்ளார். தாயினதும் தந்தையினதும் கடமைகளையும் துன்பதுயரங்களையும் உணர்ந்த சைவசமயம் தாய்க்கும் தந்தைக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளது. பெற்றோர்தான் கண்கண்ட தெய்வங்கள். அதனால் பெற்றோரை வணங்கி ஆசிபெறும் முறைகளையும், பெற்றோர் இறந்தபின் தாய்க்குப் பௌர்ணமி தினங்களிலும், தந்தைக்கு அமாவாசை தினங்களிலும் விரதமிருந்து அவர்களை வணங்கி ஆசிபெறச் சொல்கிறது. எமக்குத் தாயும் தந்தையும் இருப்பதுபோல உலகம் முழுவதற்கும் தாயும் தந்தையுமானவன் சிவபெருமான். அவன் வேதத்தை விளக்கியவன். சொந்தங்களுக்கு அப்பாற்பட்டவன். தன்னைப் பற்றின்றி வணங்கும் அடியார்களுக்கு வெளிப்பட்டு அருள் செய்பவன். அனைத்துமாய் இருப்பவன். இருப்பினும் அவனுடன் ஒன்றுபட முடியாதவர்களாகவே நாம் வாழ்கிறோம். அவனது அருளைப் பெற்றுவிட்டவர்களை அவன் தன்னுடன் சேர்த்துக் கொள்வான். இதைப் பலர் அறிவதில்லை. அவனோடு ஒன்றுபடும்முறை மிகவும் இலகுவானது. முதலில் உடலை நான் என்று எண்ணி அதைப் போற்றுவதைவிட வேண்டும். அடுத்து சிற்றின்பம் தரும் பொருட்கள் அனைத்தையும் மனதைவிட்டு நீக்கிச் சிவனே தஞ்சமென்று நினைத்துச் சிவனை வணங்க வேண்டும். இவ்வாறு வாழ்ந்தால் சிவனோடு ஒன்றுபடலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**44) முழுதயில் வேற்கண்ணியரென்னும் மூரித் தழல்முழுதும்**

**விழுதனை யேனை விடுதிகண்டாய் நின்வெறி மலர்த்தாள்**

**தொழுது செல்வான் நல்தொழும்பரிற் கூட்டிடு சோத்தெம்பிரான்**

**பழுது செய்வேனை விடேலுடையாய் உன்னைப் பாடுவனே.**

கருணாகரன் முற்றாக மாறிவிட்டான். அவன் இப்போது மது அருந்துவது இல்லை. மாமிசம் புசிப்பதில்லை. வியாபாரத்தைக் கைவிட்டுவிட்டு ஆச்சிரமத்தில் தங்கினான். அது அவனது தந்தையான தனபாலசிங்கத்திற்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சொன்னார்; "எனது மகன் கெட்டழிந்து போனதற்குக் காரணம் நான் தான். பெற்றோர் ஒழுக்கமுள்ளவர்களாகவும், முன்மாதிரியானவர்களாகவும் நடந்தால்தான் பிள்ளைகள் அவர்களைப் பார்த்துத் திருந்துவர். அவர்கள் பிள்ளைப்பருவத்தில் பெற்றோருடன் அதிகநேரம் இருப்பதால் அவர்கள் பெற்றோரைப் பின்பற்றியே வாழத் தொடங்குகிறார்கள். நான் வீட்டில் இருந்து மதுவை அருந்திவிட்டுக் கதைக்கக் கூடாதவற்றையெல்லாம் கதைப்பேன். தீய செயல்களைச் செய்யும்படி சொல்வேன். கலப்படம் செய்வது எப்படி, மற்றவர்களை ஏமாற்றுவது எப்படி என்றெல்லாம் சொல்வேன். அவன் சகல விடயங்களிலும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகப் பணத்தைக் கணக்குப் பாராது செலவு செய்தேன். அவன் கலைவாணியை விரும்புவதாகச் சொன்னபோது முதன்முதலாக அவனது விருப்பத்தை மறுத்தேன். அதனால் அவன் அதிகமாகக் குடிக்கத் தொடங்கினான். பின் மனம் பொறுக்க முடியாமல் சம்மதித்தேன். ஆனால் கலைவாணி அவனை மதிக்காது இன்னொருவனை மணந்து கொண்டாள். ஏமாற்றமடைந்த அவன் ஏமாற்றப்பட்டதால் தற்கொலை செய்ய முயன்றான். அதைக் கதிரேசன் தடுத்துவிட்டார். அதனால் விரக்தியுற்ற அவன் தொழிலை மறந்து ஆசசிரமத்திற்கு வந்துவிட்டான். அதனால் தயவுசெய்து தொழிலைக் கவனிக்கும்படி சொல்லுங்கள்" என்றார்.

அவர் சொன்ன பின்பு கருணாகரனிடம் வந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்; "சுவாமி, எனக்கு எல்லாம் வெறுத்துவிட்டது. அதனால்தான் உயிரை விட்டுவிட விரும்பினேன். அது தடைப்பட்டுவிட்டது. உலகச் சிற்றின்பங்கள் அனைத்தையும் அளவுக்கதிகமாக அனுபவித்ததால் அவையாவும் இப்போது கசக்கின்றன. முன்பு பெண்களைக் கண்டால் எனது மனம் தீயைக் கண்ட வெண்ணெய்போல உருகும். இப்போது எனக்கு அவர்களைக் கண்டால் வெறுப்பாக இருக்கிறது.

திருவாசகத்தைப் படித்த பின்பு மாணிக்கவாசக சுவாமிகள் கூறியவை நினைவுக்கு வருகின்றது. முழுமையான கூரிய வேல்போன்ற கண்களையுடைய மாதராகிய பெருந்தீயில் குளித்தது வெண்ணெய் போன்று உருகுகின்ற என்னை நீ புறக்கணித்துவிடுவாயோ..? மனம் நிறைந்த மலரை ஒத்த உனது திருவடியைத் தொழுது உனது பக்தர்கள் உன்வசமாகின்றனர். அவர்களோடு என்னையும் சேர்த்துக்கொள். எம் தலைவனே உன்னைப் போற்றுகின்றேன். குற்றங்கள் பல செய்த என்னை புறக்கணித்துவிடாதே. அனைத்தையும் உன்னுள் அடக்கியவனே. உன்னை நான் போற்றிப் பாடித் துதிக்கின்றேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் எக்குற்றங்களையும் செய்யாது தான் செய்ததாக நினைத்து வேதனைப்படுகிறார். அவர் கூறிய குற்றங்கள் அனைத்தையும் செய்த என்னைச் சிவன் ஏற்றுக் கொள்வாரா?" என்று கேட்டான் கருணாகரன்.

"மனிதாகள் எல்லோரும் தன்னை அடைந்து பேரின்பம் பெறவேண்டும் என்பதே சிவனது விருப்பம். குற்றங்கள் பலவும் செய்த பலர் சிவனை இடையறாது வணங்கி அவனை அடைந்துள்ளனர். நீயும் அவ்வாறு வணங்கு" என்றார் சுவாமியார்.

"இனிச் சிவனை அடைவதையே நோக்கமாகக் கொண்டுள்ளேன். அதனால் நான் இனி யாரையும் சந்திக்கவோ, பேசவோ விரும்பவில்லை" என்றான் கருணாகரன்.

**45) பாடிற்றிலேன் பணியேன் மணிநீயொளித் தாய்க்குப்பச்சூன்**
**வீடிற்றிலேனை விடுதிகண்டாய் வியற் தாங்கலறித்**
**தேடிற்றிலேன் சிவனெவ் விடத்தான் எவர் கண்டனரென்று**
**ஓடிற்றிலேன் கிடந்துள்ளுருகேன் நின்றுழைத்தனனே.**

"சுவாமி, திருவாசகம் என்னை முழுமையாக மாற்றிவிட்டது. தினமும் தொழுது போற்றிப்பாடி பற்றுக்கள் அற்று வணங்கிய மாணிக்கவாசக சுவாமிகள், "மாணிக்கமே உள்ளை நான் போற்றிப் பாடவில்லை. உனக்குப் பணி செய்யவில்லை. என்னை விட்டு நீ மறைந்து சென்ற பின் பச்சை விரனாலான இந்த உடம்பை ஒழிக்கவில்லை. அப்படிப்பட்ட என்னை நீ விட்டுவிடாதே. நீ பிரிந்த பிறகு சிவன் எங்கு இருக்கிறான்? அவனைக் கண்டவர் யார்? என்று

வியந்து அப்பொழுது நான் உன்னைத் தேடவில்லை. ஓடிப் பார்க்கவில்லை. நிலைகுலைந்து மனம் உருகவில்லை. வீணாக நின்று வருந்தினேன்" என்கிறார். தான் சொன்ன எல்லாவற்றையும் அவர் சரியாகச் செய்த அவர் தான் அதைச் சொல்லவில்லை என்று கூறும்போது எல்லாவற்றையும் செய்த நான் எதைக்கூறுவது. சிவனைக் குடித்துவிட்டு நிந்தனை செய்யும்போது சிவன் என்று ஒருவன் இருக்கிறானா? இருந்தால் எனக்கு காட்டுங்கள். அவனைக் கண்டவன் யார்? அவனை அழைத்து வாருங்ள். சிவனை அழைத்து வரச் சொல்வோம். என்றெல்லாம் ஆராயாது பேசுவேன். அப்படிப்பட்ட என்னைச் சிவன் மன்னிப்பாரா...?" என்று அழுதான் கருணாகரன்.

**46) உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயினொப்பாய்**

**விழைதரு வேனை விடுதிகண்டாய் விடின் வேலைநஞ்சுண்**

**மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்**

**பழைதரு மாபரனென்றென் றறைவன் பழிப்பினையே.**

"சுவாமி எல்லாவற்றையும் வெறுத்துச் சிவனே தஞ்சம் என்று வாழ்நாள் முழுவதும் யோகத்தில் இருந்த மாணிக்கவாசக சுவாமிகள் ஏன் இவ்வாறு சொல்கிறார் என்று சிற்றறிவும் அறியாமையும் கொண்ட எனக்கு விளங்கவில்லை. அதனால் தடுமாற்றமாக உள்ளது. அவர் சொல்கிறார்; "பலாப்பழத்தை ஈ மொய்ப்பதுபோல மான் போன்ற விழிகளை உடைய மாதரிடமிருந்து பெறும் சிற்றின்பத்தை தான் விரும்புகிறேன். அதை முன்னிட்டு நீ என்னைப் புறக்கணித்து விடாதே. என்னை நீ விலக்கினால் உன்னை நான் கடலில் எழுந்த நஞ்சை உண்டவன் என்றும், கறைக்கண்டன் என்றும், நற்குணம் இல்லாதவன் என்றும், என்னைப் போன்ற வெறும் மானிடன் என்றும், அறிவு குறைந்தவன் என்றும் முதுமையடைந்த வேற்றான் அல்லது பரதேசி என்றும் பழித்துப் பேசுவேன்" என்றும் கூறுகிறார். இது தகுமா...? பாவ மில்லையா...? அப்படிப் பேசலாமா....? படிக்கப் பயமாக இருக்கிறது" என்றான் கருணாகரன்.

"இவற்றையெல்லாம் எண்ணாதே. ஒருவர் மீது வைக்கும் அன்பு அளவுகடந்து மிகுந்தால் வாய் மனதோடு சம்பந்தமில்லாது பேசும். தனது குழந்தையை நேசிக்கும் தாய் கற்கண்டே என்பாள். தங்கமே என்பாள், தீச்சுடரே என்பாள், மாம்பழமே என்பாள். பின் விளையாட்டாக நான் உன்னைப் பெறவில்லை. வைத்தியசாலையில் வணங்கினேன் என்பாள். குறும்பு செய்தால்

நரியிடம் கொடுத்து விடுவேன் என்பாள். காதலனும் காதலியும் தம்மை மறந்து பேசும்போது பேசத்தகாத வார்த்தைகளையெல்லாம் பேசுவார்கள். இது இயல்பு. ஞானிகள் இப்படியெல்லாம் கூறிச் சிவனோடு விளையாடுவர். அதுவும் இயல்பு. சிலர் பெருந் தனவந்தர்கள். தம்மிடம் பணம், பொருள் எதுவுமில்லை. எல்லாம் சிவனின் சொத்தென்பர். சில கற்றவர்கள் தாம் கற்கவில்லை என்பர். இவை அன்பின் மிகுதியாலும், பற்றற்ற நிலையாலும் ஏற்படுபவை. சுந்தரமூர்த்தி நாயனாரைச் சிவன் தன்னைப் பித்தா என்று அழைத்துப் பாடச் சொன்னவர். அரசனொருவன் வலதுகாலைத் தூக்கியாடாதே இடது காலைத்தூக்கி ஆடு என்றவன். கண்ணப்பர் பன்றியின் மாமிசத்தை உண்டு ருசிபார்த்துவிட்டுச் சிவனுக்குக் கொடுத்தவர். இவையெல்லாம் அன்பால் நடைபெறுபவை. இவற்றைப் பற்றி ஆராயாதே. இப்போதும் சிவபக்தர்கள் தமக்குத் தீமை வந்தால் கண்கெட்ட சிவன் என்பார்கள். உன்னை இனி வணங்க மாட்டேன் என்பர்கள். பின்பு வணங்குவார்கள். சிவனின் அருள் கிடைத்தால் உனக்கு யாவும் புரியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**47) பழிப்பில்நின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப்பழித்து**

**விழித்திருந் தேனை விடுதிகண்டாய் வெண்மணிப் பணிலம்**

**கொழித்து மந்தார மந்தாகினி நுந்தும்பந் தப்பெருமை**

**தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர் தரு தாரவனே.**

"மகனே, எதைச் செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்ய வேண்டும். அதைத்தான் நினைத்தல் வேண்டும். அதைப்பற்றி அறிந்தவர்களோடு பேச வேண்டும். அதைப்பற்றிக் கனவு காண வேண்டும். வேறு எதையும் நினைக்கக்கூடாது. நினைத்தால் செயலில் இறங்க முடியாது. உனக்கு உனது தாயின்மீது பாசம் அதிகம். இப்போ உனது தாயார் நீ வாழ்க்கையை வெறுத்துத் துறவு பூண்டமையால் மிகுந்த கவலையுடன் இருக்கிறார். சரியாக உணவுகூட உண்பதில்லை. இவற்றைப் பற்றி நினைத்தாலே உனது எண்ணம் பாழாகிவிடும். அதனால் நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே இரு. மாணிக்கவாசகரது திருவாசகத்தைப்படி. சிவனை நினைத்துப்படி. அதை நம்புவதன்மூலம் சிவனை அடைய முடியும் என்று ஞானிகள் கூறியிருக்கிறார்கள். அதனால் எதைப்பற்றியும் சிந்திக்காதே. சிந்தனை மனதைக் குழப்பும். பல்வேறுபட்ட நினைவுகளை உருவாக்கும். மாணிக்கவாசக சுவாமிகள் ஞானி. அவரை வரலாறு ஞானி என்கிறது. சிவபக்தர்கள் சுவாமி என்கின்றனர். அவர் சொல்கிறார்;

“கங்கைநதி முத்துக்களையும், சங்குகளையும் தள்ளிக்கொண்டு வருகிறது. அதில் மந்தாரமலர்கள் மிதந்து வருகின்றன. உனது நீண்டசடை அணையாக மாறி பாய்ந்துவரும் கங்கைநீரைத் தடுத்து தேக்கி வைத்திருக்கிறது. அதில் பிறைச்சந்திரன் படகுபோன்று மிதந்து கொண்டிருக்கிறான். உனது கழுத்தில் வெற்றிமாலை பளபளக்கிறது. பெருமைமிக்க உனது திருவடிக்கு தொன்றுதொட்டு வந்துள்ள முறைப்படி பணிவிடை செய்து, அதைப் பழித்துப் பேசிச் சிறுமையடைந்த நான் பயத்தால் விழி பிதுங்க நிற்கிறேன். அத்தகைய புல்லினாலான என்னை நீ பொருட்படுத்தாது விடுவாயோ…?” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கேட்கிறார். இது ஞானிகளின் குணம். அது சிவனுக்குத் தெரியும். சிவனறியாதது எதுவுமுண்டா…? ஆகையால் கருமமே கண்ணாக இரு எதையும் சிந்திக்காது சிவனை மட்டும் சிந்தி” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**48) தாரகை போலும் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்**

**வீரஎன் தன்னை விடுதிகண்டாய் விடிலென்னை மிக்கார்**

**ஆரடி யானென்னின் உத்தரகோச மங்கைக்கரசின்**

**சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே.**

“மகனே, மாணிக்கவாசகரது சொல்மாலை இனிமையானது. அர்த்தம் பொதிந்தது. இறைவனைக் கவர்வது. அவர் இறைவனோடு தனக்கிருக்கும் நெருக்கத்தைப் பலவழிகளாலும் புரிய வைக்கிறார். சிலர் புகழ்வதுபோல இகழ்வார்கள். சிலர் இகழ்வது போலப் புகழ்வார்கள். காளமேகம் என்றொரு புலவர் முன்பு வாழ்ந்தவர். அவர் சிவனை இகழ்வது போலப் புகழ்வார். அந்தவகையில் மாணிக்கவாசகரது சொல்மாலையும் அமைந்திருக்கிறது. “சிவனே நட்சத்திரம் போன்ற கபாலத்தை தலைமாலையாக அணிந்திருக்கிறாய். தீயை வைத்திருக்கிறாய். விசமுள்ள பாம்பை ஆபரணமாக அணிந்திருக்கிறாய் ஆதலால் நீ ஒரு வீரன். அத்தகைய நீ எதுவும் இல்லாத என்னைக் கீழ்மைப்படுத்திவிடாதே. கீழாவனான என்னைப் பார்த்து, “நீ யாருடைய அடியவன்”? என்று சான்றோர் கேட்பார்கள். அப்போது நான் “உனது அடியவர்க்கு அடியவன்” என்று சொல்வேன். அப்போது உனது நிலைமை சிரிப்புக்கிடமாகும் என்பதை உணர்ந்து கொள்” என்கிறார். இதன் மூலம் சிவனது உருவ அழகு கூறப்பட்டுள்ளது. இதையே எல்லா நூல்களும் கூறுகின்றன. அவை புகழ்ந்து கூற

இவை இகழ்வது போலப் புகழ்ந்து கூறப்படுகின்றன. நான் உனது அடியவர்க்கு அடியவன் என்று கூறுவது புகழ்பெற்ற உனக்கடியவன் அல்ல, புகழ்பெற்ற உன்னை வணங்கும் அடியவர்களுக்கு அடியவன் என்று கூறித் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**49) சிரிப்பிப்பின் சீறும் பிழைப்பைத் தொழும்பையும் ஈசற்கென்று**
**விரப்பிப்ப னென்னை விடுதிகண்டாய் விடின் வெங்கரியின்**
**உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன் நஞ்சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு**
**எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப் பிச்சனென் றேசுவனே.**

அன்று ஆச்சிரமத்தில் நடைபெற்ற ஆராதனையின் பின் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றினார். கருணாகரன் கண்களை மூடியவாறு அமர்ந்திருந்தான். சுவாமிகள் சொன்னார்; "மாணிக்கவாசக சுவாமிகளது திருவாசகம் சிவனின் பெருமைகளை எடுத்தியம்பும் ஒரு வர்ணிக்கமுடியாத அரிய நூல். அதில் சொல்லப்பட்டவை எல்லாம் வைரங்களைப் போன்ற பெறுமதியான வார்த்தைகள்; "நான் உன்னோடு உரிமையாகப் பேசுகிறேன். நான் உனது அடியவர்களுக்கு அடியவன் என்று கூறிவிட்டேன். அதனால் நான் உனக்கு வேறானவன் என்று எண்ணாதே. நான் பிழை செய்தவன் என்று நீ என்னை வெறுத்துப் புறக்கணித்தாயானால், உனது செயல் சரியானதல்லவென்று ஊரார் சிரிக்கும்படி செய்வேன். பின்பு நான் உனது தொண்டன் என்பதை எனது செயல்கள் மூலம் விபரமாக விளக்குவேன். அப்படிச் செய்தால் என்னை உன்னால் எப்படி ஒதுக்க முடியும்? அப்படி ஒதுக்கும் தகாத செயலைச் செய்தாயாயின், நீ யானைத் தோலைப் போர்த்த பித்தன் என்றும், புலித் தோலை உடுத்த பித்தன் என்றும், நஞ்சை அஞ்சாது உண்ட பித்தன் என்றும், ஊரில் உள்ள சுடுகாடுகளில் எரியும் தீயில் விளையாடும் பித்தன் என்றும், என்னை வலியவந்து ஆட்கொண்டு பின் புறக்கணித்த பித்தன் என்றும் ஊரவர்க்குச் சொல்லி உன்னைப் பழிதீர்ப்பேன்" என்கிறார். இவையெல்லாம் சிவனின் திருவிளையாடல்கள். சுந்தரமூர்த்தி நாயனார் தனது திருமணத்தைத் தடுத்தபோது "பித்தா" என்று ஏசினார். அதனால் மகிழ்ந்த சிவன் தன்னைப் பித்தன் என்று பாடும்படி பணித்தார். பித்தன் என்பது அளவுக்திகமான அன்பின் வெளிப்பாடு. அந்நிலை ஏற்படும்போது மகிழ்ச்சிப் பெருக்கால் எதைச் சொல்வதென்று தெரியாமல் தடுமாறுவது. ஆனந்தபரவசத்தில் இருந்த மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை மறந்த நிலையில், அதாவது அளவற்ற

பாசத்தைச் சிவன்மீது கொண்ட நிலையில் கூறுகிறார். ஒரு குழந்தை தன் தாயை அன்பின் மிகுதியால் அம்மா எடி என்றும் போ வா என்றும் கூறுவது போல மாணிக்கவாசகரும் குழந்தைபோலவும் எதுவும் அறியாத அறிவிலி போலவும் கூறுவது சிவனுக்குத் தாயைப் போன்ற மகிழ்வைக் கொடுக்கிறது. இதை மெய்யடியார்கள் உணர்ந்து கொள்வர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**50) ஏசினும் யானுன்னை யேத்தினும் என்பிழைக்கே குழைந்து**
**வேசறு வேனை விடுதிகண்டாய் செம்பவள வெற்பின்**
**தேகடை யாயென்னை ஆளுடையாய் சிற் றுயிர்க் கிரங்கிக்**
**காய்சின ஆலமுண்டாய் அமுதுண்டக் கடையவனே.**

"சிவனே நான் உன்மீது கோபப்பட்டு ஏசினாலும், வாழ்த்தினாலும் அப்படிச் செய்த குற்றத்திற்காக வருந்துகின்ற என்னை ஒதுக்கித் தள்ளிவிடாதே. ஏனென்றால் நீ என்னை எப்பொழுதும் ஆண்டருளும் அண்ணல். அதனால் நான் உனது அடிமை. நீ ஞானம் மிகுந்த பவளமாலை. எனது அறியாமையை நீக்கி ஞானவானாக்கு. உயிர்கள் அனைத்தும் வாழ்வு என்னும் அமுதை உண்ண முந்துகின்றன. அதனால் ஏற்படும் கொடிய விசத்தை நீ ஏற்று அவ்வுயிர்களைக் காப்பாற்றுகின்றாய். அது உனது கருணைமிக்க தியாகமாகும். உயிர்களின் அறியமையாகிய அஞ்ஞானத்தை அழித்தல் என்னும் கடைசிச் செயலைச் செய்பவனே. எனது அஞ்ஞானத்தையும் அழித்துவிடு" என்று மாணிக்கவாசகர் சிவனை இரக்கிறார். அன்பு மிகுதியால் ஒருவர் செய்யக்கூடாதவைகளையும் செய்வார். அது குற்றமல்ல என்பது சம்பந்தப்பட்ட பெரியவருக்குத் தெரியும்." என்று கூறிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனது உரையை முடித்தபின் மக்கள் சென்று விட்டனர். கருணாகரன் சுவாமியாருக்கு அருகில் வந்து அமர்ந்தான். எதுவும் பேசவில்லை. சுவாமியாரைப் பார்த்துக்கொண்டு வெகுநேரம் இருந்தான். மக்கள் வந்து அவருடன் பேசினர். சிலர் ஆசிபெற்றனர். கருணாகரனுடன் சேர்ந்து சிவனையும் சுவாமியாரையும் கண்டபடி பேசிக்கேலி செய்த இரத்தினம் என்பவன் சிவனடியார் வேடமிட்டு வந்து சுவாமியாரின் பாதங்களைப் பற்றி; "சுவாமி மது மயக்கத்தாலும், ஆணவத்தாலும் நான் சிவனையும், உங்களையும் வாய்க்கு வந்தபடி ஏசிக்கேலி செய்து விட்டேன் என்னை மன்னியுங்கள்" என்றான். கருணாகரனுக்குச் சிரிப்பு வந்தது. சிரித்தான். அப்போது அவனுக்கு மாணிக்கவாசகரின் நிலை புரிந்தது. அது குடும்பப் பிரச்சினை. அன்பின் மிகுதியால் உண்டான அடிபிடி சண்டை. அன்பின் மிகுதியால் உள்ளவன்

அக்கறை காரணமாக நல்லவற்றைச் சொல்வான். அது தீதாகவும் மாறலாம். அன்பால் நடப்பது அறியாமையாலும் நடக்கும். இதைப் பெரிதுபடுத்தலாகாது. என்று நினைத்துப் பார்த்தான் கருணாகரன்.

“கதிரேசன் சொன்னார்; “சமயத் தத்துவங்கள் முடிந்த முடிபுகளாகும். அதை ஆராயக்கூடாது. ஆராய்ந்தால் வீணான மனக்குழப்பங்கள் உண்டாகும். உனது நண்பனான பரணிதரன் கௌசல்யாவைத் தீவிரமாகக் காதலித்தான். இரு பகுதியினரும் அதை விரும்பவில்லை. இருவரினதும் பெற்றோர் வெவ்வேறு இடங்களில் அவர்களுக்குத் திருமணம் பேசினர். பரணீதரனுக்குத் திருமணம் முற்றானது. அவன் கௌசல்யாவையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருந்தமையால் அவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டது. அதனால் நல்ல அறிவாளியான அவன் ஒரு வேளை கௌசல்யாவைப் புகழ்ந்து பேசுவான். இன்னொரு வேளை இகழ்ந்து பேசுவான். அவனது பெற்றோர் வைத்தியம் செய்தனர். குணமாகவில்லை. அதனால் அவனுக்குக் கௌசல்யாவைத் திருமணம் செய்து வைத்தனர். இப்போ இரண்டு பிள்ளைகள் பிறந்து விட்டன. இருந்தும் அவனது பித்துக் குணமாகவில்லை. சிலசில நேரங்களில் அவன் புலம்புவதை நீ பலமுறை கண்டிருக்கிறாய். ஒருவன் ஒன்றைத் தீவிரமாக யோசித்தால் அவன் அதுவாகிவிடுவான். அந்நிலைதான் மாணிக்கவாசக சுவாமிக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால் தான் அவர் மாறி மாறிப் பாடுகிறார்” என்றார் கதிரேசன்.

*திருச்சிற்றம்பலம்*